லை ரூபா: 15.00


Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

ங்கங்கள்: பத்து

Valampurii

த 08 வள்ளுவர் ஆண்டு 2039 புரட்டாதி 15 புதன்கிழமை (01.10.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 287




# வன்னிக்கான நிவாரணப் பொருள்களை

# இவ்வாரம் கொண்டு செல்ல முடியாத நிலை

## .நா. அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

ன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்கான வுகள் மற்றும் மருந்துகள் அடங்கிய நிவாரணப் ருள்களை இவ் வாரம் வன்னிக்குக் கொண்டு ல முடியாத நிலை காணப் படுவதாக ஐ.நா. அதிகாரி வர் தெரிவித்துள்ளார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## நவராத்திரி விழாவில் சன நெரிசல் இராஜஸ்தானில் 147 பேர் உயிரிழப்பு

(சென்னை)

இந்தியாவின் வடக்கே இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள ஜோஜ்பூர் நகரில் இந்து ஆலயம் ஒன்றிற்கு வழிபாட்டிற்காகச் சென்ற பக்தர்கள் சன நெரிசலில் சிக்கியதில் 147 பேர் உயிரிழந்தனர். நூற்றுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.

நவராத்திரி ஆரம்ப நாளான நேற்று அதி காலை முதல் மகரந்தக் கோட்டையிலுள்ள கோவிலில் ஆயிரக் கணக்கான பக்தர்கள் கூடினர்.

அந்தக் கோவிலிலிருந்து 2 கிலோமீற்றர் தூரத்திற்கு மக்கள் நெரிசலான நிலையில் நின்றனர். கோவில் திறக்கப்பட்டதும் ஆண்களுக்கென அமைக்கப்பட்ட வரிசையில் பக்தர்கள் ஒருவருக்கொருவர் தள்ளிக் கொண்டு முன்னேற முயன்றபோது பக்கவாட்டில் அமைக்கப்பட்ட (10 ஆம் பக்கம் பார்க்க)

## ஒஸ்லோவில் ண்ணாவிரதம்

(ஒஸ்லோ)

தச தொண்டு நிறுவனங்கள் வன் ந்து வெளியேற்றப்பட்டமையைக் நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோ ணாவிரதப் போராட்டம் இடம்பெற்

வே நாடாளுமன்றக் கட்டடத் தொ ன்பாக நேற்று முன்தினம் காலை கு ஆரம்பமான உண்ணாவிரதப் ் நேற்றுப் பிற்பகல் 3 மணி வரை றது.

ண்ணாவிரதப் போராட்டத்தில் ன்ற உறுப்பினர்களும் ஆயிரக் தமிழ் மக்களும் கலந்து கொண் ரிவிக்கப்பட்டது. (ஏ)

# வன்னிக் களமுனைகளில் நேற்று உக்கிர மோதல்

## சேத விபரம் குறித்து மாறுபட்ட தகவல்

(கொழும்பு)

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு கள முனைகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல்களில் 50 விடுதலைப்புலிகளும் 10 இராணுவத்தினரும் பலியானதாகப் பாது காப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இம் மோதல்களில் 32 படையினர் காய மடைந்துள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. மாங்குளத்திற்கு வட மேற்கே விடுதலைப்புலிகள் அமைத்திருந்த விமான ஓடுபாதை ஒன்றை இராணுவம் கைப்பற்றியுள்ளதாகவும் பாதுகாப்பு அமைச்சுத் தெரிவித்துள்ளது.

அவ் விமானத் தளம் தமது விமானத் தாக்குதலுக்கு இலக்காகியதையடுத்து அப்பகுதியை விடுதலைப்புலிகள் கரும்புலிகளின் பயிற்சித் தளமாகப் பயன்படுத்தி வந்ததாகவும் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது.

இதேவேளை முல்லைத்தீவில் கொக்காவில் பகுதியையும் இராணுவத்தினர், விடுதலைப்புலிகளிட (10 ஆம் பக்கம் பார்க்க)


## ிய மட்ட விளையாட்டுப் போட்டி

### ணாதயாக் கல்லூரி மாணவி ூன்றிப் பாய்தலில் தங்கம்

(கொழும்பு)

லைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் ல் நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட பெண் கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அரு கல்லூரி மாணவி எஸ்.தனுஷா முதலாம் இடத்தைப் ங்கப் பதக்கம் வென்றார்.

துக்குட்பட்ட பெண்கள் பிரிவில் நேற்று முன்தினம் ல் புதிய சாதனை படைத்து (10 ஆம் பக்கம் பார்க்க)



## வன்னிக்கு அறுபது லொறிகளில் பொருள்கள் அனுப்ப நடவடிக்கை

### அரசாங்கம் தெரிவிப்பு

(கொழும்பு)

வன்னியில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்கள் 60 லொறிகளில் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக மீள்குடியேற்ற மற்றும் அனர்த்த நிவாரண சேவைகள் அமைச்சர் றிசாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி ஆலோசகர் பசில் ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற கூட்டத்தின் போது இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாக அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி (10 ஆம் பக்கம் பார்க்க)

# ன்னி மக்களை வெளியேற்ற .நா. ஊடாக அரசு முயற்சி?

(கொழும்பு)

பிலுள்ள மக்களைப் பாதுகாப் பாவுக்கு அழைத்து வருவதற்கு ஐ.நாவிடம் அரசாங்கம் கோரிக் ்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ச்சி மற்றும் முல்லைத்தீவு மக்களை வவுனியாவுக்கும் மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்த மக்களை அவர்களின் சொந்த இடங்களுக்கும் அழைத்து வருவதற்கே இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக விடயம் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

வன்னி மக்களுக்கு ஐ.நா. நிறுவனங்கள் மனிதாபிமான உதவிகளை வழங்க இலங்கை அரசு அனுமதியளிக்க வேண்டும் என கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் சபையின் 63-வது கூட்டத் தொடரின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐ.நா. பொதுச் செயலாளர் உட்பட (10 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் படகு மீது தாக்குதலாம்

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் இரண்டு படகுகளை நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் தாக்கியழித்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

பூநகரி கல்முனைப் பகுதியில் ரோந்து சென்ற படையினர் புலிகளின் இரண்டு படகுகளை அவதானித்தனர்.

இதையடுத்து அவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டு அப் படகுகள் மூழ்கடிக்கப்பட்டன. இதில் 8 விடுதலைப்புலிகள் உயிரிழந்ததாகப் பாதுகாப்பு அமைச்சு கூறியுள்ளது. (ச)



வண்ணார்பண்ணை சென்.பீற்றர்ஸ் கில்னர் பாலர் பாடசாலையின் விளையாட்டு விழாவில் மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட டாக்டர் துரைராஜா வில்லியம் ஜெயகுலராஜா மாணவர்களுக்குப் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# விடுதலைப் புலிகளுக்கு உதவுவதற்கு மேற்கு உலக நாடுகள் முயல்கின்றன

## தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் குற்றச்சாட்டு

விடுதலைப் புலிகளுக்கு எதிரான மல்ரிபெரல் (பல்குழல் துப்பாக்கி) மூலம் தாக்குதல் நடத்துவதால் மட்டும் பிரிவினைவாத பயங்கரவாதத்தை தோல்வியடையச் செய்ய முடியாது. அதன் பின்னணியில் உள்ள அனைத்து அரசியல் நிகழ்ச்சி நிரல்களையும் தோல்வியடையச் செய்யவேண்டும்.

உயிர் ஊசலாடிக் கொண்டிருக்கும் புலிகளுக்கு மேற்குலக நாடுகள் ஒட்சிசன் கொடுக்க முயல்கின்றன என தேசப் பற்றுள்ள தேசிய மத்திய நிலையம் குற்றஞ்சாட்டுகிறது.

கொழும்பில் தேசிய நூலக ஆவணவாக்கல் சபை கேட்போர் கூட்டத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றிய தேசப்பற்றுள்ள தேசிய மத்திய நிலையத்தின் தலைவர் தம்பர அமில தேரர் இவ்வாறு தெரிவித்தார்.

படையினர் வெற்றிகரமாக புலிகளுக்கு எதிரான யுத்தத்தை முன்னெடுத்து வருவதோடு கிளிநொச்சியையும் அண்மித்துள்ளனர். இந்தச் சந்தர்ப்பத்தில் புலிகளை பாதுகாப்பதற்கான ஐரோப்பிய ஒன்றியம் உட்பட இணைத்தலைமை நாடுகள் பல்வேறு நிபந்தனைகளை விதித்து யுத்தத்தை நிறுத்தி பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க வேண்டுமென வலியுறுத்தத் தொடங்கியுள்ளன.

மனித உரிமை மீறல்கள், சிவில் அரசியல் உரிமைகள் பறிப்பு என்ற குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றன. இவ்வாறான தலையீடுகளுக்கு அரசாங்கம் களம் அமைத்துக் கொடுக்கின்றது.

ஆடைத் தொழிற்துறைக்கு வழங்கும் ஜீ.எஸ்.பி பிளஸ் வரியை நிறுத்தப்போவதாகவும் தெரிவிக்கின்றன. ஐ.நா மனித உரிமை ஆணைக்குழுவில் எமது நாட்டுக்கு உறுப்புரிமை இல்லாமல் போனதற்கு யுத்தம் காரணமல்ல. உறுப்புரிமையை வழங்கவேண்டாம் என ஐ.நாவில் விநியோகிக்கப்பட்ட துண்டுப் பிரசுரத்தில் என்ன் தெரிவிக்கப்பட்டிருந்தது தெரியுமா?

இலங்கையில்17-வது திருத்தச் சட்டம் முன்னெடுக்கப்படுவதில்லை. அதற்கமைய சுயாதீனக் குழுக்கள் அமைக்கப்படவில்லை. ஊடக சுதந்திரம் மீறப்படுகின்றது. ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்படுகின்றார்கள்.

மூதூரில் ப்டுகொலை செய்யப்பட்ட 17 தன்னார்வத் தொண்டு நிறுவனப்பணியாளர்கள் தொடர்பான விசாரணைகள் முன்னெடுக்கப்படவில்லை. மேற்கண்ட குற்றச்சாட்டுக்களுக்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது.

ஏனவே வெளிநாட்டுத் தலையீடுகளுக்கு அரசாங்கமே களம் அமைத்துக் கொடுக்கின்றது. ஒருபுறம் புலிகளுக்கு எதிரான தாக்குதல்களை நடத்தும் அரசாங்கம், மறுபுறம் வெளிநாட்டுத் தலையீடுகளுக்கும் உதவுகிறது.

தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வன்னியில் மக்களுக்கு சேவை செய்யவில்லை. புலிகளுக்கு பதுங்கு குழிகளை அமைக்கவே உதவி புரிகின்றன. மேலும் மேலும் இந்த விளையாட்டுக்களுக்கு இடமளிக்க முடியாது. எனவே அவற்றை வெளியேற்றுமாறு காலாகாலமாக வலியுறுத்தினோம்.

ஆனால் தற்போதுதான் அரசாங்கத்தின் கண்கள் திறந்துள்ளன. மீண்டும்இந் நிறுவனங்களுக்கு அரசாங்கம் இடமளிப்ப தென்பது எமது படையினரின் அர்ப்பணிப்புக்களை கொச்சைப்படுத்தும் செயலாகும். இடம் பெயரும் தமிழ் மக்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து நம்பிக்கையை உருவாக்கவேண்டும்.

அதனைவிடுத்து, வெளிநாடுகளில் மாநாடுகளில் கலந்து கொண்டு தமிழ், பாளி உரைகளில் உரையாற்றுவதால் பிரிவினைவாத பயங்கரவாதத்தை ஒழித்துவிட முடியாது என்றும் தம்பர அமர தேரர் தெரிவித்தார்.

(ச-5)

# விண்கற்களால் எதிர்காலத்தில் மாபெரும் ஆபத்து காத்திருக்கிறது

## சர்வதேச விஞ்ஞானிகள் கூட்டத்தில் எச்சரிக்கை

(சான்பிரான்சிஸ்கோ)

அண்டவெளியில் காணப்படும் விண்கற்களால் எதிர்கால பூலோகவாசிகளுக்கு பாரிய அபாயம் காத்திருப்பதாகவும், எனவே முழு உலகமும் ஒன்றிணைந்து அதற்கு ஒரு தீர்வைக் காண வேண்டும் எனவும் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

அமெரிக்கா சான்பிரான்சிஸ்கோவில் நடைபெற்ற சர்வதேச விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் மற்றும் விஞ்ஞானிகளின் விசேட கூட்டத்தின்போதே விஞ்ஞானிகள் இவ்வாறு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பூமிக்கு அண்மையிலான வஸ்துகளின் விண்வெளி வெடிப்புகள் சபையைச் சேர்ந்த இவ் விஞ்ஞானிகள், இருவருட தீவிர ஆராய்ச்சியையடுத்தே மேற்படி அறிக்கையை சமர்ப்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பூமியை விண்கற்கள் அணுகும் பட்சத்தில் அது தொடர்பான அபாயத்தை எதிர்கொள்ள சர்வதேச சமூகம் தயாராக வேண்டும்.

எனவே நாம் இது சம்பந்தமான முயற்சிகளில் ஒரு நிறுவன கட்டமைப்பொன்றை ஏற்படுத்துவது அவசியம் என மேற்படி சபை உறுப்பினரும் அப்பலோ 9 விண்கல விண்வெளி வீரருமான ருஸ்தி ஸெவீக்கார்ட் கூறினார்.

மேற்படி அனர்த்தத்தை தவிர்ப்பதற்கான முயற்சிகளில் சர்வதேச ரீதியான நிறுவனக் கட்டமைப்பு உருவாக்கம் தொடர்பில் போதிய அக்கரை இதுவரை செலுத்தப்படவில்லை என அவர் கவலை தெரிவித்தார்.

எதிர்வரும் ஆண்டுகளில் முன்னேற்றகரமான தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பூமிக்கு அச்சுறுத்தலாக விளங்கக் கூடிய மேலும் பல விண்கற்கள் கண்டறியப்படலாம் என் அவர் குறிப்பிட்டார்.

ஐயாயிரம் வருடங்களுக்கு முன் ஒரு பஸ் அளவிலான விண்கல்லொன்று அமெரிக்க அரிஸோனா மாநிலத்தில் விழுந்தமைக்கான சான்றுகள் கிடைத்துள்ளதாக கூறப்படுகிறது. அதன் பின் கடந்த சில வருடங்களில் கனடாவிலும் பெருவிலும் சிறிய அளவான விண்கற்கள் விழுந்துள்ளன.

அத்துடன் ஒரு நூற்றாண்டுக்கு முன் சிபேரியாவின் காட்டுப் பகுதியில் விழுந்த விண்கல் மூலம் வெளிப்பட்ட சக்தியானது ஹிரோசிமாவில் அணுகுண்டு போடப்பட்ட போது வெளிபடுத்தப்பட்ட சக்தியிலும் ஆயிரம் மடங்கு அதிகம் என மதிப்பிடப்பட்டுள்ளது.

65 மில்லியன் வருடங்களுக்கு முன் பூமியில் விழுந்த பாரிய விண்கல்லால் டைனோஸர்களும் உலகின் ஏனைய 70 சதவீதமான உயிரினங்களும் அழிவடைந்ததாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். (அ-6)

## தொடர்பு கொள்ள கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

புலமைப்பரிசில் பரீட்சை புள்ளியிடலால் பாதிக்கப்பட்டு 27.09.2008 அன்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜரில் கையொப்பமிடத் தவறிய பெற்றோர்கள் தமது விவரங்களையும் சேர்த்துக் கொள்ள விரும்பின் யாழ். மாவட்ட ஈபிடிபி பொறுப்பாளர் உதயனுடன் தொடர்பு கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மாணவர்களின் பெற்றோர் பிரதிநிதிகள் கேட்டுக் கொண்டுள்ளனர். (ச)

## பரிசளிப்பு விழா

(அல்வாய்)

வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா எதிர்வரும் 4ஆம் திகதி சனிக்கிழமை காலை 9மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி வி.சுகுமாரன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ் கலந்து கொள்வார். பரிசில்களை திருமதி பரமேஸ்வரி கணேஷ் வழங்கிக் கௌரவிப்பார். (ஓ-19)

# பண மோசடியில் ஈடுபட்ட மாணவிக்கு விளக்க மறியல்

(பருத்தித்துறை)

நெல்லியடியில் வைத்திய கலாநிதி ஒருவரின் பெயரைப் பயன்படுத்தி பண மோசடியில் ஈடுபட்ட பாடசாலை மாணவி ஒருவர் பருத்தித்துறை நீதிமன்றத்தினால் எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

நெல்லியடியில் மோசடிக்குழுவொன்று, யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றும் வைத்திய கலாநிதி ஒருவரின் பெயரைப் பயன்படுத்தி, அவ் வைத்தியரிடம் சிகிச்சை பெறுவதற்காக 50 ரூபாவைச் செலுத்தி பதிவு செய்து கொண்டால் 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள் இலவசமாக வழங்கப்படும் எனத் தெரிவித்து பதிவுகளை மேற்கொண்டுள்ளது.

இதனையடுத்து பலர் முண்டியடித்துக் கொண்டு தமது பதிவுகளை மேற்கொண்டனர். எனினும் இந் நடவடிக்கையில் சந்தேகம் கொண்ட சிலர் நெல்லியடிப் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டுள்ளனர்.

இதனையடுத்து நெல்லியடிப் பொலிஸார் சம்பவத்துடன் தொடர்புடைய மாணவி ஒருவரைக் கைது செய்து பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் நீதிவான் கே.அரியநாயகம் முன்னிலையில் நேற்று ஆஜர்படுத்தினர். இவ்வழக்கை விசாரணை செய்த நீதிவான் குறிப்பிட்ட மாணவியை எதிர்வரும் 10 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

குறிப்பிட்ட மாணவி தான் சேகரித்த பணத்தை வைத்தியசாலை நிதியில் சேர்த்துள்ளதாக தெரிவித்ததையடுத்து யாழ்.போதனா வைத்தியசாலையின் கணக்காளரை எதிர்வரும் 10 ஆம் திகதி நீதிமன்றிற்கு சமுகமளிக்குமாறும் அத்துடன் குறிப்பிட்ட மாணவியின் பாடசாலை அதிபரையும் அன்றைய தினம் ஆஜராகுமாறும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார். (ச-52

# இன்று ஒரு தகவல்

## தகவல் ஜோசியம்

இதுவரைக்கும் உங்களுக்கு தகவல் தானே சொல்லிக் கொண்டிருந்தேன். இன்று உங்களுக்கு ஜோசியம் சொல்லப் போகிறேன். நாடி ஜோசியம், ரேகை ஜோசியம் மாதிரி இது தகவல் ஜோசியம் என்று வைத்துக் கொள்ளுங்களேன். கவனமாகக் கேளுங்கள். நான் சொல்வதெல்லாம் உங்களுக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்று நீங்களே முடிவு செய்யுங்கள்.

நீங்கள் எப்படிப்பட்டவர் என்றால், அடுத்தவர்கள் உங்களை விரும்ப வேண்டும், பாராட்ட வேண்டும் என்ற எண்ணம் உங்களிடம் அதிகமாக இருக்கும்.

உங்களிடம் உள்ள நல்லது – கெட்டதை அடிக்கடி நினைத்துப் பார்ப்பீர்கள். அப்படி சுயமாக விமர்சனம் செய்யும் தன்மை உங்களிடம் உண்டு.

உங்களிடமுள்ள திறமைகள் பலவற்றை பயன்படுத்தி நன்மையடையாமல் வீணாக்கிக் கொண்டிருக்கிறீர்கள்! என்ன சரிதானா?

உங்கள் ஆளுமையில் பல குறைகள் இருந்தால் கூட பொதுவாக அதற்கெல்லாம் நீங்கள் வேறுவகையில் ஈடு செய்து விடுவீர்கள்! அடிக்கடி உங்களுடைய முடிவுகளும் செயல்களும் சரியானவைதானா என்ற சந்தேகம் உங்களிடம் தீவிரமாக ஏற்படுவதுண்டு.

நீங்கள் ஓரளவுக்கு மாற்றமும் – புதுமையும் ஏற்பட வேண்டும் என்று ஆசைப்படுவீர்கள்; கட்டுப்பாடுகளும், தட்டுப்பாடுகளும் உங்களை அடக்கி வைக்கும் போது உங்களுக்கு அதிருப்தி உண்டாகும். நாம் சுயேச்சையாக சிந்திக்க கூடியவர் என்ற நினைப்பு உங்களிடம் உண்டு. மற்றவர்கள் சொல்வதை ஆதாரமில்லாமல் ஏற்றுக் கொள்ள மாட்டீர்கள்.

மற்றவர்கள் நம்மைப்பற்றி அளவுக்கு மீறி வெளிப்படையாகப் பேசுவது புத்திசாலித்தனமில்லை என்பதை நீங்கள் புரிந்து வைத்துள்ளீர்கள்.

நடைமுறைச் சாத்தியமில்லாத ஆசைகள் உங்களிடம் உண்டு. சுயபாதுகாப்பு என்பது உங்களுடைய முக்கியமான இலட்சியங்களில் ஒன்று.

சில சமயம் மற்றவர்கள் உங்களிடம் வந்து சகஜமாக பழகக் கூடிய அளவுக்கு நடந்துகொள்வீர்கள். சில சமயம் கவனமாக இருப்பீர்கள், தயங்குவீர்கள், ஒதுங்கிப்போய் விடுவீர்கள். இதுவரை நான் சொன்ன ஜோசியம் உங்களுக்கு ஒத்து வருகிறதா?

அப்படி ஒத்துப் போனால் என்னைப் பாராட்டாதீர்கள். நீங்கள் பாராட்ட வேண்டியது (Ross stagner) என்ற மனோதத்துவ நிபுணரை!

அவர் நடத்திய உளவியல் சோதனையில் தான் இந்தப் பலன்கள். எனக்கு ஜோசியமும் தெரியாது, ஒன்றும் தெரியாது. பொதுவாக மனிதர்கள் பாராட்டுக்களை விரும்புவார்கள் விமர்சனங்களை வெறுப்பார்கள்– அதை மனதில் வைத்து பலன் சொன்னால் சரி.

ஒருவரை " கிருமி " என்று சொல்வதை விட சிக்கனமானவர் என்று சொன்னால் அவர் ஏற்றுக் கொள்வார்.சொல்லும் பலன் எல்லாம் பொதுப்படையானது தான் என்றாலும் அது தனக்கு மட்டுமே உரியவை. கண்டுபிடிக்கப்பட்டவை என்ற பிரேமையை கேட்பவர் மனதில் உண்டாக்க வேண்டும் அது தான் ஜோசியரின் சாமர்த்தியம். இந்த பிரேமைக்கு உளவியலாளர் " பார்னம் உத்தி "என்று பெயர் வைத்துள்ளனர்.

பீனியஸ் பார்னம் என்பவர் 19ஆம் நூற்றாண்டில் அமெரிக்காவில் ஒரு பிரபல சர்க்கஸ்கம்பனி நடத்தி வந்தார்.

" உலகத்தில் ஒவ்வொரு நிமிடமும் ஒரு ஏமாளி பிறந்து கொண்டு இருக்கிறான் '' என்பது தான்அவருடைய சித்தாந்தம்.

ஒவ்வொருவரையும் திருப்திப்படுத்துவது மாதிரிகேளிக்கை நிகழ்ச்சிகளை நடத்தியது தான் அவருடைய மகத்தான வெற்றிக்கு காரணமாம்.

அந்த உத்தியை வைத்துதான் இப்பொழுது பல பேர் பிழைப்பு நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.அப்படி பிழைப்பு நடத்தும் ஒரு சாமியாருக்கு ஏகப்பட்ட தொண்டர்கள். பல பேருக்கு அவர் அருள் வாக்கு சொல்வார்.

ஒரு நாள்ஒருஅம்மா கவலையுடன் அவரிடம் வந்தார்.

இவர் அவரைப் பார்த்தவுடன் '' கவலைப்படாதே சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டுச் சென்ற உன் வீட்டுக்காரன் ஒரு நாள் வந்து சேருவான் '' என்றார்.

அந்த அம்மா போனவுடன் சீடன் அவரிடம் "அது எப்படி சுவாமி சரியாக சொல்றீங்க? "என்று கேட்டான்.

அதற்கு அவர் " அவளுடைய
தொந்தரவு தாங்க முடியாமல்
தலைமறைவு ஆகிவிட்ட அந்த அப்பாவி நான் தானப்பா!"
என்றார்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# உணவையும் மருந்தையும் ஆயுதமாகப் பயன்படுத்துவதை அரசாங்கம் உடனடியாக நிறுத்த வேண்டும்

(கொழும்பு)

வன்னிப் பிரதேசம் மீது நடாத்தப்பட்டு வரும் தரை ஆகாயத் தாக்குதல்களால் சுமார் இரண்டரை லட்சம் வரையான மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாகி அல்லற்பட்டு வருகின்றனர். அவர்களுக்கு உணவுப் பொருட்களும் மருந்து வகைகளும் அவசியத் தேவைகளாக உள்ளன. குழந்தைகள் பால்மா இன்றித் தவிக்கின்றனர். நோயாளர்கள் உரிய சிகிச்சைகள் கிடைக் காமையால் அவதியுறுகின்றனர். மக்கள்மரங்களின் கீழும் வயல் வெளிகளிலும் காடுகளிடையேயும் அன்றாட வாழ்வைக் கழித்து வருகின்றனர். யுத்தத்தில் வெற்றி பெறுவதற்காக உணவையும் மருந்தையும் ஆயுதங்களாகப் பயன்படுத்துவதை அரசாங்கம் உடன் நிறுத்த வேண்டும் வன்னி மக்களைப் பட்டினி போட்டுப் பழிவாங்கும் செயற்பாட்டை உடன் நிறுத்தி அவர்களுக்குரிய அத்தியாவசிய உணவு,மருந்து, பால்மா என்பவற்றை அவசரமாக அங்கு அனுப்பிவைக்க வேண்டும் எனப் புதிய -ஜனநாயக கட்சி வற்புறுத்திக் கேட்டு கொள்கின்றது.

இவ்வாறு புதிய ஜனநாயக கட்சியின் அரசியல் குழு சார்பாக அதன் பொதுச் செயலாளர் சி.கா. செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுள்ளார். மேலும் அவ் அறிக்கையில் இன்று கிளிநொச்சியைக் கைப்பற்றுவதிலும் வன்னியை மீட்பதிலும் யுத்தம் முனைப்பாக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியும் அமைச்சர்களும் அதனை நியாயப்படுத்துவதில் முழு மூச்சாகவுள்ளனர். ஆனால் இது வரையான படை நடைவடிக்கைகளின் உக்கிரத்தினால் சுமார் இரண்டரை இலட்சம் மக்கள், இடம் பெயர்ந்து உணவு, உடை, இருப்பிடமின்றி குழந்தைகளுக்கு பால் மா கொடுக்க முடியாமலும் நோயாளர்களுக்கு உரிய மருந்துகள் இன்றியும் நிர்க்கதிக்குள்ளாகி நிற்கின்றனர். பௌத்த தர்மம் பேசும் ஜனாதிபதியும் அமைச்சர்களும் இந்த மனித அவலம் புற்றி அக்கறை காட்டாது இருந்து வருகின்றனர். வன்னிக்குள் பரிதவிக்கும் தமிழ் மக்கள் இந்நாட்டுப்பிரஜைகள் இல்லையா? அவர்களைப் பட்டினி போட்டுப் பழிவாங்க நிற்பதனை ஜனநாயகம் என்பதா அல்லது பௌத்த தர்மம் எனக் கொள்வதா? மஹிந்த சிந்தனை என்பது இன்று யுத்த சிந்தனையாகி நிற்பதையே காண முடிகின்றது.

எனவேவன்னி மக்கள் படும் அவலம் நீக்கவென ஊருக்குப் பெயருக்காக ஒரு சில லொறிகளில் குறைந்தளவு உணவு பொருட்களை அனுப்பாது அம் மக்களுக்குத் தேவைப்படும் போதிய அத்தியாவசிய உணவு மருந்து வகைகளை அனுப்ப அரசாங்கம் விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதையே வற்புறுத்துகின்றோம்.

அதேவேளை கிளிநொச்சியைக் கைப்பற்றவும் வன்னியை மீட்கவும் நடாத்தி வரும் யுத்தத்தின் மூலம் யுத்தத்திற்கு காரணமான தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு கண்டு விட முடியாது என்பதையும் சுட்டிக் காட்டுகிறோம் சம்பந்தப்பட்ட தரப்பினர் அனைவரும் கலந்து கொள்ளக் கூடிய விரிவான பேச்சு வார்த்தை மூலம் உடன்பாடு காணப்படும் நியாயமான அரசியல் தீர்வே யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர உள்ள வழி முறையாகும். அத்தகைய அரசியல் தீர்வே தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி நாட்டிற்கும் அனைத்து மக்களுக்கும் அவசிய மாகின்றது. அதன் மூலம் ஐக்கியப்பட்ட இலங்கையில் பல்லினங்களும் சமாதானம் அமைதியுடன் இணைந்து வாழும் புதிய சூழல் தோன்ற முடியும் என எமது கட்சி திடமாக நம் புகிறது. என்றும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# சைவ சமய அறிவுப் போட்டி முடிவுகள்

தென்மராட்சி கல்வி வலயத்தில் அண்மையில் நடைபெற்றசைவ சமயஅறிவுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் பெயர்விபரம் வருமாறு.

தரம்–6–க.கீர்த்தனா–குடமியன் அ.த.கபாட,சி.ஜெசிந்தா–குடமியன் அ.த.க பாட,யோ.சுபிதா–கரம்பைக் குறிச்சி அ.த.கபாட,

தரம்–7–பா.ஆதவன்–குடமியன் அ.த.கபாட, சி.டயானிகா–வரணி வடக்கு சைவ பிரகாசம், கி.தனுஷன்–இயற்றாலை அ.மி.த.க.பாட.

தரம்–8–அ.கார்த்திகா–வரணி வடக்கு சைவ பிரகாச வித்தி , தி.மிதுனா–வரணி வடக்குசைவ பிரகாசவித்தி, செ.அபிராமி–கரம்பைக் குறிச்சி அ.த.க.பாட.

தரம்–9– சி.லோஜிகா–குடமியன் அ.த.க.பாட ,இ. கௌதமி–கரம்பைக் குறிச்சி அ.த.க.பாட

**தரம் 6–13 பாடசாலைகள்**

தரம்–6–சி.மதுரிகன்–உசன் இராம நாதன் ம.வி, சி.கிருத்தி கா–சரசாலைஸ்ரீ கணேசா வித்தி

தரம்–7–பி.திரிஷிகா– வரணி மகாவித்தி, க.பூங்குன்றன்–வரணி மகாவித்தி, ப. அனுஷா–மந்துவில் ஸ்ரீபாரதி வித்தி .

தரம்–8–ப.சலித்தகா–கொடி. திரு நாவுக்கரசு,வி.மதுஷா– உசன் இராமநாதன் ம.வி, சி.சாயித்தியன்–உசன் இராமநாதன் ம.வி

தரம்–9–த.தவராசசிவம்–மிருசுவில் றோ.க.த.ம,ற. அனுஷாலினி–கச்சாய் அ.த.க.பாட, ம.கார்த்தீபன்–மீசாலை வீரசிங்கம் ம.வி

தரம்–10–இ.இராஜப் பிரவிந்தன்–சா.இந்துகல்லூரி ,கி.தேனுகா–சா.மகளிர் கல்லூரி ,சி. பிரதீபா–மட்டுவில் சந்திர மௌலிக வித்தி

தரம்–11–அ.சுவர்ணா–நாவற்குழி ம.வித்தி, ப.தனுஷா– கைதடி நாவற்குழி அ.த.க.பாட , தி.மீரா –மிருசுவில் அ.த.க.பாட

தரம்–12–மு.சாலினி–உசன் இராம நாதன் ம.வி,த.குகதீசன்–மீசாலை வீரசிங்கம் ம.வி, ம. ஆரணிக்கா–சாவ.இந்துக்கல்லூரி


தரம்13–அ.சசிரேகா–உசன் இராம நாதன்,த.குகதீசன்–மீசாலை வீரசிங்கம்ம.வி சி.சிவவாணி–சா.இந்துக்கல்லூரி (ஓ)

## இராசி பலன்

01.10.2008
(புரட்டாதி 15, புதன்கிழமை)
சித்திரை முற்பகல் 11.59 மணிவரை
துதியை பிற்பகல்02.52மணிவரை
இராகுகாலம்–12.02–1.32 மணிவரை
சுபநேரம்–04.32–06.02 மணிவரை
ஏகாதசி விரதம்

| | |
|---|---|
| மேடம் | செல்வாக்கு; காரிய அனுகூலம்,குடும்ப மகிழ்ச்சி,அபூர்வ சந்திப்பு |
| இடபம் | சுவாரஸ்யம்,முயற்சிகை கூடும், ஆரோக்கியம், போசன சுகம் |
| மிதுனம் | அஜீரணரோகம் ,வேலைச்சுமை, முயற்சி தாமதம், தனவிரயம் |
| கடகம் | உறவினர்சந்திப்பு, மனச் சஞ்சலம், ஆரோக்கியக்குறைவு, கல்வியில் ஆர்வம் |
| சிங்கம் | இனிய சம்பவம், கூட்டுமுயற்சி, வாக்குமேன்மை, போசனசுகம் |
| கன்னி | விவாதம், கௌரவக்குறைவு, திடீர்நன்மை, பண விரயம் |
| துலாம் | கற்பனை மிகுதி, சயனசுகம், நண்பர்கள்சந்திப்பு, போசன சுகம் |
| விருச்சிகம் | தந்தைவழிஉறவு, உணர்ச்சி வசப்படல், உஷ்ணவியாதி, பிரயாணம் |
| தனுசு | செய்தொழில் நன்மை, கீர்த்தி, காரிய நன்மை,விருந்துபசாரம் |
| மகரம் | அதிகாரம், தொழில் முன்னேற்றம், பெரியோர் உதவி, ஆரோக்கியம் |
| கும்பம் | ஆரோக்கியக்குறைவு, கட்டுப்பாடு, புதிய முயற்சி, ஆன்றோர் சந்திப்பு |
| மீனம் | வாகன பயம், எதிர்பாராத பிரச்சினை, காரிய தடங்கல், போசன சுகம் |

வளவன்



உள்ளூராட்சி மறு சீரமைப்புத் திட்டத்தின் கீழ் மாதந்தோறும் கொண்டாடாப்படும் "ஒரு புத்தகம் ஒருசமுதாயம்" எனும் நிகழ்வின் 3ஆவது புத்தக ஆய்வு சாவ.நகர சபையின் பொது நூலகத்தினரால் நடாத்தப்பட்டது.இந்நிகழ்வில் "சிறுவர் பாடல்கள் "என்ற நூலைஇயற்றிய அதிபர் மு.பாலசுப்பிரமணியம் அறிமுகவுரை ஆற்றுவதனையும் தென்மராட்சி பிரதேச செயலக உதவிப் பிரதேச செயலர் திருமதி அ. சாந்த சீலன் ,நகர சபைச் செயலர் திருமதி கு. ஆறு முகம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் கணலாம்

# கரித்தாஸ் கியூடெக் நிறுனத்தால் கற்கோவளத்தில் 200 வீடுகள் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

கரித்தாஸ் கியூடெக் நிறுவனமானது மாதப் பகுதியில் 200 வீடுகளை ஆரம்பித்து முறையே கற்கோவளத்தில் 70 திக்கத்தில் -55இன்பர்சிட்டியில் 45 மற்றும் சுப்பர்மடப்பகுதியில் 30 வீடுகளுக்குமான கட்டுமானப்பணி நடைபெற்று வருகின்றது.

அவற்றில் கற்கோவளப்பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 70 வீடுகளும் 39 மலசல கூடங்களும் பயனாளிகளுக்கு வைபவரீதியாக கையளிக்கப்படவுள்ளன.

இந்த நிகழ்வானது யாழ். கரித்தாஸ் கியூடெக் நிறுவன இயக்குநர் அருட்பணி கி.ஜோ. ஜெயக்குமார் அடிகளாரின் தலைமையில் ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதி நடைபெறவுள்ளது.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அடிகளார் பிரதமவிருந்தினராகவும், யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு இவ் நிரந்தர வீடுகளை பயனாளிகளுக்கு கையளிக்கவுள்ளனர்.

கரித்தாஸ் கியூடெக் நிறுவனமானது சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுப்பதில் யாழ். மாவட்டத்தில் முக்கிய பங்காற்றி வருகின்றது.

2008க்கு முன்னர் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கரித்தாஸ்கியூடெக் நிறுவனமானது 279 நிரந்தர வீடுகள் கையளித்ததுடன் சகல வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

2008 ஜனவரி மாதத்தில் சக்கோட்டைப் பகுதியில் 57 வீடுகளும் தும்பளை பருத்தித்துறைப் பகுதியில் 97வீடுகளும் பயனாளிகளுக்கு கையளிக்கப்பட்டது.யாவரும் அறிந்ததே. (அ)

# வெள்ளி விழா

(யாழ்ப்பாணம்)

இன்று குருத்துவப் பணியில் 25 ஆண்டுகளை பூர்த்தி செய்யும் செபமாலை த.ஈசர் சபையில் மாகாண முதல்வர் அருட்திரு. பிலிப் ஸ்ரனிஸ்லஸ் டொன் பொஸ்கோ அடிகளார் இன்று காலை 10.30மணிக்கு இல. 05,கோயில் வீதி அமைந்துள்ள அருள் ஆச்சிரமத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கவுள்ளார். (ஓ)

# சாரதி அனுமதி பத்திரத்திற்கான செயன் முறைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக யாழ். மாவட்ட செயலக போக்குவரத்துத்திணைக்களத்தினால் நடாத்தப்பெற்ற எழுத்துப்பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தவர்களுக்கான செயல் முறைப் பரீட்சை கீழே குறிப்பிடப்படும் ஒழுங்கில் நடைபெறவுள்ளதாகவும் , புதிய மோட்டார் சைக்கிள் பதிவுக்கான வாகனப் பரிசோதனையும் வழமைபோல் நடைபெறுவதாகவும் யாழ். மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

| எழுத்துப்பரீட்சை இடம்பெற்ற திகதி | செயல்முறை பரீட்சை நடைபெறும் திகதி |
|---|---|
| செப்ரெம்பர் 16 | ஒக்டோபர் 3 |
| 18 | 4 |
| 22 | 6 |
| 23 | 7 |
| 24 | 8 |
| 25 | 9 |
| 26 | 10 |

சகல தினங்களிலும் மு.ப. 9.30 மணிக்கு பரீட்சை ஆரம்பமாகும். (ஓ)

# நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

ஏழாலை ஆத்மஜோதி அறநெறிப் பாடசாலையின் நவராத்திரி விழா எதிர்வரும் 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு ஆத்மஜோதி தியான மணிமண்டபத்தில்,சைவம் மாகஜனா வித்தியாலய அதிபர் ந. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் அறநெறிப் பாடசாலை மாணவ மாணவிகளின் பேச்சும் இடம்பெறும். (ஓ)

# நவராத்திரி உற்சவமும்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் கிழக்கு, அருள் தரு கேணியடி, காளி அம்பாள் தேவஸ்தானத்தில் நேற்று செவ்வாய் க்கிழமை முதல் எதிர்வரும் 8ஆம் திகதி வரையான 9 நாட்களும் மாலை 5 மணிக்கு அம்பிகைக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம் பெற்று வருகின்றன. 10 ஆம் நாளான 9ஆம் திகதி வியாழக்கிழமை மாலை மானம் பூ உற்சவமும் இடம் பெறும்.

அதே தினம் 6 மணிக்கு அம்பிகைக்கு விஷேஷ அபிஷேக ஆராதனைகளுடன் கௌரிக்காப்பு உற்சவம் இடம் பெறும் தொடர்ந்து 21 தினங்கள் இவ்வுற்சவம் இடம் பெறும். (ஓ)

# காலங்கடந்த பிறப்பு, இறப்பு பதிவுகளுக்கான நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

கரவெட்டிப்பிரதேச செயலாளர் பிரிவின் காலம் கடந்த பிறப்பு, இறப்புக்களை பதிவு செய்வதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் 3ஆம்திகதி வெள்ளிக்கிழமை காலை 8 . 30 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதுவரை பிறப்பு இறப்பு அத்தாட்சிப் பத்திரங்கைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் இந் நடமாடும் சேவையில் தங்களிடம் உள்ள ஆவணங்களுடன் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

இந்நடமாடும் சேவையில் உத்தேச வயதுச் சான்றிதழ் வழங்குவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பிரிவில் தேசிய அடையாள அட்டையினை பெற்றுக் கொள்ளாதவர்கள் பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் இல்லாத காரணத்தினாலேயே அதனை பெற்றுக்கொள்ள முடியாது இருப்பதாக அறிய வருவதனால் இந்நடமாடும் சேவையில் மக்கள் தவறாது கலந்து பயனடையுமாறு பிரதேச செயலாளர் சி. சத்தியசீலன் கேட்டுள்ளார். (ஓ)

# விலங்கு விசர் நோய் தொடர்பான நலத்துறைச்செய்திகள்-நாள் 4

(யாழ்ப்பாணம்)

விலங்கு விசர் நோய்கட்டுப்பாட்டு செயற்பாடுகள்.

மனிதருக்கான தடுப்பு மருந்தேற்றல்

- முற்கூட்டிய தடுப்பு மருந்தேற்றல்
- நாய்க்கடியின் பின்னான தடுப்பு மருந்தேற்றல்

வளர்ப்பு நாய்களுக்கான தடுப்பு மருந்தோற்றல்

- நாய்குட்டியின்6 வார வயதில் முதலாவது தடுப்பூசி
- நாயின் 6 மாத வயதில் இரண்டாவது தடுப்பூசி
- பின்னர் வருடமொரு தடவை தவறாது தடுப்பூசியை போட்டுக்கொள்ளவேண்டும்.

நாய்களுக்கான இனப்பெருக்கக் கட்டுப்பாடு

- ஆண்நாய்களுக்கான கருத்தடை சத்திரச்சிகிச்சை.
- பெண்நாய்களுக்கான கருத்தடை சத்திரச்சிகிச்சை.

பெண்நாய்களுக்கான 6 மாதத்திற்கு ஒரு தடவை போடப்படும் கர்ப்பத்தடை ஊசி.

இந்த சேவைகளை அருகில் உள்ள கால்நடை வைத்தியசாலை அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையுடன் தொடர்பு கொண்டு இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். (ஓ)


# சர்வதேச சிறுவர் தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவும், அரசசார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நடாத்தும் சர்வதேச சிறுவர் தின நிகழ்வுகள் இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் யாழ். மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் கி.குணாளசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். அரசாங்க அதிபர் க.கணேஷ். சிறப்பு விருந்தினராக யாழ். மேலதிக அரசாங்க அதிபர் ஆ.சிவசுவாமி, கௌரவ விருந்தினர்களாக யாழ்ப்பாணம் சிறுவர் பாதுகாப்பு இலங்கை மாவட்ட முகாமையாளர் விக்டர் மோசஸ், யாழ். யுனிசெவ் நிகழ்ச்சித் திட்ட நிபுணர் டயானி ஆர்க்கி ஆகியோர் கலந்துகொள்வார்.

மேலும் சிறுவர் இல்லங்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள் பிரதேச ரீதியில் வெற்றியீட்டிய சிறுவர் கழக சிறுவர்கள் ஆகியோருககான பரிசில் வழங்கலும், கலைநிகழ்வுகளும் இடம் பெறவுள்ளன. (அ-6)




# தரம் 5புலமைப்பரிசில் பரீட்சை பெறுபேறுகள்

**பரு.தட்டாதெரு மெ.மி.த.க பாடசாலை**

ச.சுகிர்தன்-137,ஜெறூம் இருதயராஜ்-137

**துன்னாலைதெற்கு.அ.த.க.பாடசாலை**

சி.சிந்துஜன்-142

**பரு.சென்தோமஸ்றோ.க.பாடசாலை**

தி.நிலக்ஷி-139,ச.யென்சியா-138, வி.விதுஷா-126.

# தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்ட போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

ஒக்டோபர் மாதத்தில் கொண்டாடப்படும் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு அறவழிப் போராட்டக் குழுவினரால் அவர்களது நிறுவனத்தில் தொழிற் பயிற்சி பெறும் மாணவர்களிடையே கட்டுரை, கவிதை, சிறுகதை போட்டிகள் நடாத்தப்பட உள்ளது.

எதிர்வரும் 4ஆம் திகதி தென்மராட்சி (நுணாவில்) வடமராட்சி (வல்வெட்டி) ஆகிய பயிற்சி நிலையங்களில் போட்டி நடைபெறும்.


இதில் வெற்றியீட்டுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஓ)

# பட்டதாரிகளுக்கு ஆசிரியர் நியமனம்

# மீள் பரிசீலனைக்கு அழைக்கப்பட்டோர் அமைச்சர் டக்ளஸுடன் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மீள் பரிசீலணைக்காக அழைக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்கள் தமது நியமனம் தொடர்பாக ஈ .பி. டி. பி தலைமைபணி




மனைக்குச் சென்று மகஜரை யாழ் மாவட்ட அமைப்பாளர் சில்வேஸ்திரி அலன்ரின் (உதயன்) கையளித்துள்ளனர். இது சம்பந்தமாக மாவட்ட அமைப்பாளர் அமைச்சர் கே. என். டக்ள்ஸ் தேவானந்தாவின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டு உடனடியாக அமைச்சர் பட்டதாரிகளுடன் கலந்துரையாடிய பின் வடக்குமாகாண கல்வி அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நியமனம் சம்பந்தமான விடயங்களை கலந்துரையாடியுள்ளதோடு ஆசிரியர்களின் நியமனம் விடயம் உறுதியான நடவடிக்கை எடுப்பதாக ஆசிரியர்களுக்குத் தெரிவித்துள்ளார். தெரிவித்துள்ளார்.

அதனை தொடர்ந்து மல்லாகம் மத்தி கிராமிய மாதர் சங்கம் ,குடத்தனை வடக்கு கடற்தொழிலாளர் சங்கம், கோயில் சங்கம், குடத்தனை நலன்புரிநிலையம், செல்வா விளையாட்டுகழகம், பொற்பதி கடற்தொழிலாளர் சங்கம், பிங்பொங் விளையாட்டு கழகம், நாகர் கோயில் தெற்கு சமூக அபிவிருத்திசபை, மணற்காடு மாதர்சங்கம், அம்பன் மாதர் சங்கம், மணற்காடு சென் அன்ரனிஸ் விளையாட்டு கழகம், மணற்காடு சென் அன்ரனிஸ் கடற்தொழிலாளர் சங்கம், மணற்காடு கிராம அபிவிருத்தி சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் தமது கிராமத்தில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி, வீட்டுத்திட்டம், மின்சாரம், மீன்பிடி ,மலசல கூடம் சம்பந்தமாக அமைச்சருடன் கலந்துரையாடியுள்ளனர்.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு கூடிய கவனம் எடுப்பதாக தெரிவித்த அமைச்சர் மக்கள் தமது தேவைகளை சுதந்திரமாகவும் கருத்து கூற முன்வரவேண்டும் எனவும் நல்ல தொரு ஜனநாயகத்தை ஏற்படுத்த மக்களாகிய நீங்கள் முன்வரவேண்டும் என தெரிவித்தார். (அ)

# நோத்முதல் கோப்பல்லவா வரை 113



1.வட மாகாணம் வைத்திலிங்கம் துரை சுவாமி அவர்கள்.

2.வட மத்திய மாகாணம் S.D கிருஷ் ணரத்தின அவர்கள் .

3.கீழ் மாகாணம் E.R .தம்பிமுத்து அவர்கள்

4.வடமேல் மாகாணம் சாள்ஸ் எட்கார் கொறியா அவர்கள்.

5.மத்திய மாகாணம் A.C.G.விஜயக்கூன் அவர்கள்.

6.தென்மாகாணம் O.C. திலகரத்தின அவர்கள்.

7.ஊவா மாகாணம் D.H.கொத்தலாவல அவர்கள்.

8.சப்ரகமுவ மாகாணம் வணக்கத்துக் குரிய W.E. பொத்தியு அவர்கள்.

9.மேல் மாகாணம் W.M. ராசபக்சே அவர் கள், யேம்ஸ் பீரிஸ் அவர்கள், E.W பெரேரா அவர் கள்.

இச்சட்ட சபையை அலங்கரித்த உத்தி யோகப் பற்றற்ற பிரதி நிதிகள் முன் சொன்ன தெரியப் பெற்ற 11 பேரை விட இன்னும் வகுப் புவாத அடிப்படையில் தேர்தல் மூலமும், நிய மன முறையிலும்இடம் பெற்றிருந்தார்கள். அவர்களை அக்கால முறைப்படி இனவாரி யாகக் கணிக்கும் போது பின்வருமாறு கணக் கிடலாம்.

1.கரை நாட்டுச் சிங்களவர் -11

2.கண்டிச் சிங்களவர்-2

3. இலங்கைத் தமிழர்-3

4.ஐரோப்பியர்-3 - 5.பறங்கியர்-2

6.முஸ்லிம் பெரியார்-1 (7) இந்தியர்-1

இச் சட்டசபையிலே சேர் இராமநாதன் அவர்கள் நியமன அங்கத்தவராயே இருந்

### மீன் பார்வை

தார். அவர் முன்னர் பத்தாண்டுகள் இலங் கையின் ஏகப் பிரதிநிதியாய் இருந்த பின் போட் டியைத் தவிர்த்திருந்தார். வட மாகாணத் தொகுதியை அலங்கரிப்பதற்கு வைத்திலிங் கம் துரை சாமி அவர்களும், அரியாலை ஆறு முகம் கனகரத்தினம் அவர்களும் போட்டி யிட்டனர். வைத்திலிங்கம் துரைசாமி அவர்க ளுக்கு நல்ல ஆதரவிருந் தமையால் அவர் பிரதி நிதியானார் அக் காலத்திலே தான் அம் பலவாணர் கனகசபை அவர்களும் நிய மன அங்கத்தவராகி ஆள்பதியின் சட்ட நிர் வாக சபையை அலங்கரிப்பாராயினர்.

இப் பிரதிநிதிகள் பதினொருவரும் இன் னும் நியமன அங்கத்தவருள்- மூவருமாகப் 14 பிரதி நிதிகள் 1922ஆம் ஆண்டில் ஆள்பதி மனிங் அவர்களுடன் அபிப்பிரா யப் பேதப்பட்டு கூட்டத்தை விட்டு வெளி யேறி விலகல் செய்து கொண்டனர். அதன் பின் அடுத்த உப தேர்தலில் அவர்கள் அத்தனை பேரும் மீளத் தெரியப் பெற்றும் நியமிக்கப் பெற்றும் அங்கத்தவராயினர்.

இக்காலத்திலே தான் யேம்ஸ் பீரிஸ், விஜயக்கூன் என்பாருடன் தேசீய மாசபையின் சார் பில் D.B யயத்திலகாவும் சேர்ந்து இங்கி லாந்திற்குச் சென்று குடியேற்ற மந்திரி யாரை கண்டு சட்ட சபையில் தாராளமான திருத்தம் வேண்டும் என்றும், அதிகாரம். சுதந்திரம், பொறுப்பு என்பன பெருமளவில் வழங்கப் படல் வேண்டும் என்றுங்கேட்டார்.

இக் காலத்தில் சீர் திருத்தங் கோரிக் கிளர்ச்சி செய்தும் தேசீய ஒருமைப்பாட்டுக்காக உழைத் தும் முயற்சி செய்த சாள்ஸ் எட்கார் கொறியா அவர்களைப் பற்றிப் பேசாமல் இருக்க இய லாது. சிலாபத்தைச் சேர்ந்த சாள்ஸ் எட்வேட் கொறியா அவர்களின் தவப் புதல் வர் இவர். தகப்பன் கொறியா அவர்கள் முன் னர் லோற ன்ஸ் ஹரிடயஸ் முதலாய பெரி யாரு டன் கூடி இலங்கையர் சங்கத்தைக் கூட்டிக் கிளர்ச்சி செய்துவெகுஇளமையிலேயே காலஞ் சென்றவர். தந்தைக்குப் பின் தனயன் தேச சேவையில் ஈடுபட்டு அயராது உழைத்து வந்தார்.

மைந்தர் கொறியா 1886இல் பிறந்து றோயல் கல்லூரியில் கல்வி கற்றுத் திறமை யான மாணவர் என்பதற்காக ரேணர்பரிசும் பெற்றவர். அவர் இளமையிலேயே நியாயவாதி யாகத் தொழில் நடத்தித் தேசத்தொண்டு செய் தார். ஆங்கிலேய மேலதிகாரிகள் நியாய மற்ற முறையில் நடந்த போதெல்லாம் அவர் கள் செய்கையைப் பத்திரிகைகளில் வன்மை யாகக் கண்டித்து எழுதினார். அவருடைய எழுத்து வன்மையையும் தேசாபிமா னத்தையும் அறிந்தவர்கள் அவரை ஈழத்து ஹம்டன் Hamden Of Ceylon என அழைத்தனர். அவரு டைய, பெரு முயற்சியாலேயே 1896ஆம் ஆண்டிலே சிலாப மகாசபை உரு வாக்கப்பட் டது. அதிலே நாட்டுப் பற்றுள்ளவர்கள் சேர்ந்து தேச விடுதலைக்காக உழைத் தனர். சிலாப மகா சபையின் புகழ் இலங்கை முழுவதும் பரவியது. அச் சபையினர் அரசாங்கத்தின் போக்கைத்தீவிரமாக எதிர்த்தமையை எல்லோ ரும் வெகுவாகப் போற்றினார்கள்.

சபையின் மேன்மையின் இரகசியம் கொறியா அவர்களின் உழைப்பேயாகும். வெறுங் காணிக் கட்டளைச் சட்டம் மன்று

**க.சி.குலரத்தினம்**

படுத்தப்பட்டபோது அதனுடைய விதிப்புக்கு எதிர்ப்புக் குரல் காட்டியவர் கொறியா அவர் களே. பல சங்கங்களும் பொதுமக்களும் வேண்டிக் கொண்ட தால் அவர் 1899ம் ஆண்டில் இங்கி லாந்துக்குச் சென்று அக்கட்டளைச் சட்டத்தை விலக்கல் செய்ய முயன்றார். அம் முயற்சியில் அவருக்கு அனுகூலம் ஏற்படாவிட்டாலும் பொது மக்களுக்குச் சில சலுகைகளை அவர் பெற்றுக் கொடுத்தார் என்பதை மறக்கலாகாது. (தொடரும்)








கோண்டாவில் பொது அமைப்புக்களும் இணுவில் லயன்ஸ் கழகமும் இணைந்து அண்மையில் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடாத்திய குருதிக்கொடையாளர் கௌரவிப்பின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நல்லூர் பிரதேசசெயலர் பா.செந்தில்நந்தனன், குரு திக் கொடையாளரை கௌரவிப்பதையும் இரத்தானம் செய்பவர்களையும் நிகழ்வில் கலந்துகொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

# எமது பாரம்பரிய பண்பாட்டு விழுமியங்கள்

# சமூக ஒற்றுமையை உருவாக்க உதவவேண்டும்



அரசியலும், பொருளாதாரத்தாலும் உலக நாடுகளை ஒரு கிராமமாக மாற்றி வரும் வளர்ச்சியடைந்த நாடுகள் மறைமுகமாகத் தமது பண்பாட்டையும் பழக்க வழக்கங்களையும் வளர்முக நாடுகளில் திணித்து வருகின்றன. அதில் பெரிதும் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுகிறது. கால மாற்றத்திற்கு ஏற்ப ஒரு சமூகத்தின் பண்பாடு, வாழ்கை முறை, பழக்கவழக்கம் மாற்றம் பெறுவது அவசியம். அப்போது தான் அச்சமூகம் வளர்ச்சி பெற முடியும். அதற்காக எமக்குரிய மரபுகளையும் பண்பாட்டு அடையாளங்களையும் கைவிட வேண்டும் என்பது அர்த்தமல்ல மாறாக எமது பாரம்பரிய பண்பாட்டுக்கு ஏற்ப புதிய பண்பாடுகளை எமக்குரியதாக நாம் மாற்றி எம் பண்பாட்டை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். ஆகவேதான் இன்றைய காலகட்டத்தில் நடாத்தப்படும் கலாசார விழாக்கள் எம்மக்களின் பாரம்பரிய பண்பாடுகள் எவை என்பதை இளம் சந்ததியருக்குப் போதிப்பதாக அமைய வேண்டும் என எல்லோரும் எதிர்பார்கின்றனர்.

**புலம் பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கும் விழிப்புணர்வு**

இன்று எமது பாரம்பரிய கலைகளை, பண்பாட்டைப் பேணுவதிலும் பராமரிப்பதிலும் எம்மை விட புலம் பெயர்ந்த தமிழர்கள் மிக ஆவலாக இருப்பதைக் காணலாம். இதற்குக் காரணம் அவர்கள் மேற்குலக நாடொன்றுக்குச் சென்றதன் பின்னரே எமது பண் பாட்டு விழுமியங்களின் உயர்வை மதிப்பிடக் கூடியதாக இருந்தமையெனலாம். மேலும் எமக்குரிய பண்பாடு எவை என்பதை அந் நாட்டவருக்குச் சொல்ல வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதும் காரணமாகலாம். இதனால் மேற்கு நாட்டவரும் எமது பண்பாடுகளை அறியும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளதெனலாம் ஐரோப்பியர் நானூறு ஆண்டுகள் எம்மீது ஆதிக்கம் செலுத்திய போது தம் நாட்டு மொழி, மதம், கலை வாழ்க்கை முறையை எம் மீது திணித்தனர். அதனால் எமது பண்பாட்டுத் தனித்துவம் சீரழியவில்லை.

ஆனால் தற்போது நிலமை மாறிவிட்டது. இப்போது எமக்குரிய பாரம்பரிய மொழியும் பண்பாடும் வாழ்க்கை முறையும் தம் நாட்டில் வளரவேண்டும் என மேற்கு நாட்டவர் வலியுறுத்துகின்றனர். இதற்கு உதாரணமாக ஆவுஸ்திரேலியாவில் நடந்த ஒரு சம்ப வத்தை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். கடந்த 15 ஆண்டுகளுக்கு முன்னர் அந் நாட்டு அரசு பிற நாட்டவருக்கான குடியுரிமைக்கான விண்ணப்பத்தை வழங்கிய போது இவ் விண்ணப் பப் படிவத்தில் சீனரும், மலாயரும், பர்மியரும் தமக்குரிய பண்பாட்டுடன் அவுஸ்திரேலியாவில் வாழ்வதாகக் குறிப்பிட்டிருந்தனர். ஆனால் ஈழத் தமிழர்கள் மட்டும் தாம் ஆங்கில மொழியையும் கிறிஸ்தவ மதத்ததையும் அந் நாட்டு வாழ்க்கை முறையையும் பின் பற்றுவதாக குறிப்பிட்டனர். இதன் விளைவால் சீனருக்கும் பர்மியருக்கும் மலாய இனத்தவருக்கும் குடியுரிமை அளித்த அந்நாட்டு அரசு ஈழத் தமிழரின் குடியுரிமையை நிராகரித்தது. இதை இவ்விடத்தில் குறிப்பிடுவதற்குக் காரணம் மாறிவரும் இன்றயை உலகில் தனி மனிதன் அல்லது சமூகம் பல மொழி பல பண்பாட்டை பல நாட்டுப் பழக்கவழக் கங்களைத் தெரிந் திருந்தாலும் அல்லது பின் பற்றினாலும் தமது பண்பாட்டு அடையாளங்களைப் பாது காத்துக்கொள்ள வேண்டும் என உலகின் பல நாடுகள் விரும்புகின்றன. அவற்றை ஊக் கப்படுத்ததுகின்றனர். அதனால் தான் மேற்கு நாடுகளில் வாழும் எம் இளைஞர்கள் தொலைந்து போன எமது பண் பாட்டை உண வுப் பழக்கவழக்கங்களை ஆடை அணிகலன் களை இலக்கியங்களை பூர்வீக வரலாற்றை எமது நாட்டில் தேடத் தொடங்கியுள்ளனர். அதன் காரணமாகவே நம் நாட்டுத் தெய் வங்களுக்கு நம் நாட்டுக் கலை மரபில் அந் நாடுகளில் ஆலயங்கள் கட்டுகின்றனர். அங்கு ஆகம மரபில் பூசை செய்ய வேண்டும் என்பதற்காக நம் நாட்டிலிருந்து பிராமணர்களை அழைக்கின்றனர். திருவிழாக் கொண்டாட நம் நாட்டுக் கலைஞர்களை அழைக்கப்படுகின்றனர்.

தமது வாழ்கைத் துணைவியாக இசையும் நாட்டியமும் கற்ற நம் நாட்டுக் கிராமத்து மணப்பெண்களைத் தேடுகின்றனர். இந்த மாற்றங்களை எல்லாம் அந்நாடுகள் வரவேற் கின்றன. இதற்கு அந் நாடுகள் பல்லினப் பண்பாடு கொண்ட தம் நாட்டில் ஒவ்வொரு இனமும் தமக்குரிய தனித்துவப் பண்பாட்டோ வாழ வேண்டும் என விரும்புகின்றன. இந் நிலையில் புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் நம் நாட்டில் தேடிவரும் நமது பண்பாட்டு வேர்களை இங்கு வாழும் தமிழர்கள் படிப்படியாகத் தொலைத்து விட்டு மேற்கத்தேய நாகரிகத்திற்குள் எம்மை மாற்றிக்கொள்ள ஆசைப்படுகின்றனர்.

3

**பண்பாட்டு அடையாளங்கள்**

நாம் பேச்சிலும் எழுத்திலும் எமது பாரம் பரியம் பண்பாடு எனச் சொல்லுகிறோம். ஒருவர் எழுந்து எமது பண்பாட்டு அடையாளங் கள் எவை எனக் கேட்டால் இன்று அதற்கு விளக் கம் கூறப் பலரால் முடியாதிருக்கிறது. விஞ்

**பேராசிரியர் க.கந்தசாமி**
பௌதீகவியல் பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

ஞானப் பேராசிரியரான எனக்கும் விளக் கமாகப் பதில் கூறத் தெரியாது. ஆனால் எனது சொந்த அனுபவத்தில் கடந்த 50 ஆண்டுகளுக்கு முன்பிருந்த அமைதியான கௌரவமான மகிழ்ச்சியான வாழ்க்கை எமது பண்பாட்டால் வழிநடாத்தப்பட்டதை நான் உறுதியாக நம்புகிறேன். எமது கல்வி போதித்த ஒழுக்கம் அன்பு மனித நேயம் ஆசிரிய மாணவ உறவுகள் பெரியவர் சிறியவர்களுக்கி டையிலான உரையாடல் கனம்பண்ணுவதில் அவர் களுக்கிடையே இருந்த உறவு நிலை மதிப்பு ஆலயத் சூழலில் வளர்ந்த நற்பண்புகள் சமயப் பெரியார்கள் போதித்த நல்லொழுக்கம் என்பன எமதுபண்பாட்டுக்குள் இருந்து வெளிக் கிளம்பிய வாழ்க்கை நெறியாகும். (தொடரும்)

# இந்தியாவின் பாணியில் புலிகளின் தடுப்பரண்கள்; தரைவழியாக முன்னேற முடியாமல் இராணுவம் தவிப்பு

## இந்திய இணையத்தளம் தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப்புலிகள் வன்னிப்போர் முனைகளில் இந்திய இராணுவத்தின் பாணியில் ஏற்படுத்தி வைத்துள்ள தடுப்பரண்களினால் இலங்கை இராணுவம் தரைமாக்கமாக முன்னேறமுடியாமல் தவிப்புக்குளாகியுள்ளதாக இந்தியஇணையத்தளமொன்று தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

விடுதலைப் புலிகள் குறித்து பல்வேறு விதமானகருத்துக்கள் நிலவி வந்தாலும் அவர்களின் இராணுவ உத்திகள் பெரும் வியப்பளிப்பவையாகவே உள்ளன. என் பதை யாரும் மறுக்க முடியாது ஒருநாட்டின் இராணுவத்திடம் இருக்க வேண்டிய அத்தனை வசதியும் சாதுரியமும் புத்திசாலித்தனமும் ஆயுத ஆள் பலமும் புலிகளிடம் உள்ளது.

இந்த நிலையில்புலிகள் ஏற் படுத்தி வைத்துள்ளபாதுகாப்பு அரண்கள் குறித்த வியப்பூட்டும் தகவல்வெளியாகியுள்ளன. அதில் என்ன ஆச்சரியம் என்றால் இத் தகைய பாதுகாப்பு அரண்களைஇந்திய இராணுவமும் கையாளுகிறது என்பதுதான்.

பாகிஸ்தானுடனான போரின்போது தான் இத்தகைய பாதுகாப்பு அரண்களை இந்தியா பயன்டுத்தத் தொடங்கியது உண்மையில் இது பிரெஞ்சுப் பாணி தடுப்பரண் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தடுப்பரண் மேற்கு மன்னார் கடலோரப்பகுதியில் உள்ள நாச்சிக்குடா முதல் கிழக்கில் உள் ளஅக்கராயன் குளம் வரையிலும் நீண்டு காணப்படுகிறது ***ஸிக்ஸாக்***வடிவிலும் மொத்தம் 3 கட்டங்களைக் கொண்டதாகவும் இந்தத் தடுப்பரண் உள்ளது.

முதலில் கண்ணிவெடிகள் பதிக்கப்பட்ட தளம் வருகிறது .அடுத்து பெரும் பள்ளம் வரும். இதைத் தொடர்ந்து வருவது தாக்குதல் நடத்தும் வீரர்கள்பதுங்கியிருந்து தாக்கக் கூடிய பதுங்குகுழிகள்

இந்த மூன்றும் சேர்ந்தது தான் புலிகளின் தடுப்பரணாகும் இந்தப் பதுங்கு குழிகளுக்குள் இருந்தபடி 360 பாகை கோணத்தில் எந்தப் பக்கம் உள்ள எதிரிகளையும் குறிபார்த்துத் தாக்க முடியுமாம்.

கண்ணி வெடிகளை இயக்குவதில் புலிகள் சாதுரியமானவர்கள் என்பது அனைவரும் அறிந்தது இந்தப் பாதுகாப்பு அரண்களில் முதலில் வரும் கண்ணிவெடி பொறியிலிருந்து அவ்வளவு எளிதில் இராணுவத்தால் தப்ப முடியாதாம் ஒரு வேளை அதற்கு அவர்கள் முயன்றால் பதுங்கு குழிகளிலிருந்து வரும் தாக்குதலையும் சமாளிக்க வேண்டும் கண்ணி வெடியையும் தாண்டிஅவர்கள் வந்து விட் டால் அகழிகள் எனப்படும் பள்ளங்களை அவர்களால் நிச்சயம் தாண்ட முடியாதாம்.

இந்த அகழிகள் 10அடி ஆழமுடையன இந்தப் பள்ளத்தை கவச வாகனங்களால் நிச்சயம் தாண்ட முடியாது. இப்படி எதிரிகளால் எளிதில் தங்களது பகுதிகளுக்குள் நுழைய முடியாது. அளவுக்குமிகச்சிறப்பான பாது காப்பு அரணை விடுதலைப்புலிகள் உருவாக்கி வைத்துள்ளனராம்.

இத்தகைய பாதுக்காப்பு அரண்களை இது வரை இலங்கைப் படையினர் சந்தித்ததில்லையாம் இதில் அவர்களுக்கு அனுபவமும் கிடையாதாம் இது குறித்தும் தெரியாதாம்.

ஐரோப்பிய நிறுவனங்கள் உதவி மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்காகக் கொண்டு வந்த இயந்திரங்களைக் கொண்டு இந்த பாதுக் காப்பு அரண்களைபுலிகள் உருவாக்கிய தாகக் கூறப்படுகிறது. இதன் காரணமாகவே நிலமார்க்கமாக விடுதலைப் புலிகளின் முக்கிய பகுதிகளுக்குள் இராணுவத்தால் நுழைய முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

மேலும் விடுதலைப் புலிகளிடம் மிகவும் அதி நவீனஆயுதங்கள் ஏராளமாக இருக்கிறதாம் ஆனால் போதிய ஆட்கள் இல்லாததே அவர்களின் தற்போதைய பின்னடைவுக்குக் காரணம் என்றும் கூறப்படுகிறது இதை இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவும் ஒப்புக்கொண்டுள்ளதாக அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

## புலிகள் மீது இராணுவம் குற்றச்சாட்டு

யாழ். மக்களின் பாதுகாப்பையும் மீனவர்களின் பாதுகாப்பையும் கருத்தில் கொண்டு அண்மைக் காலமாக கடற்தொழில் மேற்கொள்ளும் மீனவர்களுக்கு குறிப்பிட்ட எல்லைக்குள் மாத்திரம் மீன்பிடிப்பதற்கு அறிவுறுத்தப்பட்டிருந்தது. தவிர்க்க முடியாத காரணங்களால் இவ்வாறு சில அறிவுறுத்தல்கள் விடுக்கப்பட்டிருந்தாலும் மீனவர்கள் முகம் கொடுத்துள்ள பொருளாதாரப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு மீண்டும் குறிப்பிட்ட சில நாட்களில் மாத்திரம் எவ்வித எல்லைக்கட்டுப்பாடுமின்றி கடலுக்குச் சென்று மீன்பிடிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் அவர்கள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்துகின்றனர் என பலாலி படைத்தலைமையகம் குற்றஞ் சாட்டியுள்ளது. (எ)

## உதைபந்தாட்ட போட்டி

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளிடையே 16 வயது , 18வயது பிரிவு அணிகளுக்கிடையிலான உதைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 11ஆம் திகதி ஆரம்பமாக உள்ளது. இப் போட்டிகள் யாவும் மட்டுவில் சந்திரபுரஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (ஓ-29)

## பகிரங்க ஏலவிற்பனை -2008
## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

மாவட்டச் செயலகத்தினால் பாவிக்கப்பட்ட தற்போது பாவனையில் இல்லாத பின்வரும் பொருட்கள் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்ட உள்ளன. பொருட்களின் விபரம் பின்வருமாறு.

| |
|---|
| கூரை மரங்கள் |
| மர அலுமாரி |
| பாவித்த கூரைத் தகடுகள் |
| பாவித்த சீலிங் சீற்றுக்கள் |
| கல்வனைஸ் பைப் கேற் |
| பாவித்த இரும்புப் பொருட்கள் |
| மர தீராந்திகள் |
| பிளைவூட் பலகை |
| இரும்புக் கம்பி வலை |
| பிளைவூட் கதவு இரும்பு பிறேம் |
| பிளைவுட் கதவு அலுமீனியம் பிறேம் |
| பாவித்த வாகன ரயர்கள் |
| பாவித்த வாகன பற்றறிகள் |
| பாவித்த எண்ணை பரல்கள் |
| கணனி அச்சு இயந்திரங்கள் |
| UPS (இடையறா மின் வழங்கி) |
| கணனிகள் |
| போட்டே பிரதி இயந்திரங்கள் |
| தொலை நகல் |
| தொலைபேசி ரிசீவர்கள் |
| கூரைகாற்றாடிகள் |

மேற்படி பொருட்களின் ஏல விற்பனையானது 16.10.2008 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும் ஏல விற்பனையில் பொருட்களைக் கொள்வனவு செய்யவிரும்புபவர் மாவட்டச் செயலகத்தின் நலன்புரிக் கிளையுடன் தொடர்பு கொண்டு அலுவலக நாட்களில் 01.10.2008 முதல் 15.10.2008 வரை காலை 9 மணி முதல் மாலை 3 மணிவரை பொருட்களைப் பார்வையிடலாம் .ஏல விற்பனையில் பொருட்களைப் பெறுபவர்கள் உடனடியாக முழுப் பணத்தொகையையும் மாவட்டச் செயலக காசாளரிடம் செலுத்திப் பற்றுச்சீட்டு பொது 172ஐப் பெற்று அன்று மாலை 4.30 க்குப் பிந்தாமல் பொருட்களை மாவட்டச் செயலகத்திலிருந்து எடுத்துச் செல்ல வேண்டும்.

கே. கணேஷ்
அரச அதிபரும், மாவட்டச் செயலாளரும்
யாழ்ப்பாண மாவட்டம்.

(சி620)

## அரசாங்க அறிவித்தல்
### பழுதடைந்த உணவுப் பொருட்களுக்கான கூறுவிலை கோரல்

கோண்டாவில், நாவற்குழி - I,II,III அரச உணவுக்களஞ்சியங்களில் மனிதப் பாவனைக்கு பயன்படுத்த முடியாத ஆனால் கால்நடைத்தீவனமாக பயன்படுத்தக் கூடிய அரிசி வகை,பயறு,பருப்பு, கோதுமை மா என்பன காணப்படுகின்றது. இப் பொருட்களை தரம் பிரிக்கும் நடவடிக்கை தற்போது களஞ்சியங்களில் நடைபெற்றுக்கொண்டிருப்பதால் அதன் அளவு விபரங்களை மாவட்ட செயலக புனர்வாழ்வு கிளையுடன் நேரடியாக தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

இப் பொருட்கள் விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட Sealcd கூறு விலைகள் யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப் பொருட்களை கொள்வனவு செய்யவிரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்பு பணமாக ரூபா 500.00 உம்,மீளளிக்க கூடியதான வைப்பாக ரூபா 15000.00 உம் செலுத்தி விண்ணப்படிவத்தை புனர்வாழ்வு கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் ***பழுதடைந்த பொருட்களுக்கான கூறு விலை*** என குறிப்பிட்டு 15.10.2008ஆம் திகதி 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு புனர் வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறு விலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள்.

பொருட்களை பார்வையிட விரும்புபவர்கள் அரச உணவுக் களஞ்சியங்களில் வேலை நாட்டகளில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணிவரை அதற்குரிய களஞ்சியங்களில் பார்வையிடலாம்.

கூறு விலைகள் 15.10.2008ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும் இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி சமூகமளித்திருக்க முடியும்.

பொருட்களை எடுப்பவர்கள் மாவட்டச் செயலக இலங்கை வங்கி கிளையில் பணத்தை உடனடியாக செலுத்தி பொருட்களை உடனடியாக களஞ்சியத்தில் இருந்து அகற்ற வேண்டும்.

கேள்விச் சபையின் முடிவே இறதியானது.

க.கணேஷ்
அரசாங்க அதிபரும்/ மாவட்ட செயலரும்
யாழ் மாவட்டம்.

(சி/1621)

## வட.இ.ச. சபைப் பரீட்சைகள் -2009

வட.இ.ச.சபையில் 2009 ஆம் ஆண்டுப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்கள் 03.10.2008முதல் விற்பனைக்கு வரும் விண்ணப்ப முடிவுத்திகதி 1.12.2008 விண்ணப்பப் படிவம் ஒன்றின் விலை அறிவுறுத்தல் பிரதியுடன் ரூபா (முப்பது) 30/- மட்டும்.

விண்ணப்பப் படிவத்தை தபால் மூலம் பெற விரும்வோர் ரூபா 45/- பெறுமதியான காசுக்கட்டளையை (மணிஓடர்) உடன் சொந்த முகவரி எழதப்பட்ட நீள் கடித உறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த தேர்வு நாடிகள்
வட இலங்கைச் சங்கீத சபை,
யாழ். வலயக் கல்வி அலுவலகம்,
செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.
எனும் இடத்தில் பெற்றுக்கொள்ளவும்.

(சி1619)

# நீர்கொழும்பில் மீட்கப்பட்ட வெடிபொருட்கள் தொடர்பில் சந்தேகத்தில் அறுவர் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு குடாப்பாடு பிரதேசத்தி லிருந்து பெருந்தொகையான வெடிபொருட் கள் தற்கொலை அங்கிகள் என்பன மீட்கப் பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் ஆறு பேரை பொலிஸார் கைதுசெய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கர் ரஞ்சித் குணசேகர தெரிவித்துள்ளார்.

சுமார் 152 கிலோகிராம் எடைகொண்ட சீ. 4 ரக அதிசக்தி வாய்ந்த வெடிமருந்துகள் பிளாஸ்ரிக் பீப்பாய்க்குள் இடப்பட்டு புதைத்து வைக்கப்பட்ட நிலையில் கண்டெ டுக்கப்பட் டுள்ளன.

அத்துடன் 3.6கிலோ கிராம் நிறை கொண்ட வெடி மருந்து அடங்கிய தற் கொலை அங்கி யொன்றும், ஒன்பதுவோல்ற் பற்றிகள், இரண் டும் பெருந் தொகையான பெட்டனேட்டர்கள்,32 வயர் கோட்கள் ரைட்விஷ னுடன் கூடிய ஒரு தொலை நோக்கி,ரி -56 ரக துப்பாக்கி, அதற்கு பயன் படுத்தப்படும் தோட் டாக்கள் 02, கிளை மோர்கள் அவற்றை பொருத்தும் வயர்கள் மற்றும் என்டனா ஆகிய இப்பிரதேசத்திலிருந்து மீட்கப் பட்டிருப்பதாக தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையம் அறிவித்துள்ளது.

இதனைத் தொடர்ந்து நீர்கொழும்பில் பொலிஸார் தேடுதல்களை நடத்தியுள்ளனர். இதன் பயனாகவே ஆறுபேர் கைது செய் யப்பட்டுள்ளனர்.

கட்டுநாயக்க பகுதியில் முன்பு கைது செய் யப்பட்டிருந்த நபர்ஒருவரின் மூலம் பெறப் பட்ட தகவலின் அடிப்படையில் வெடிமருந் துகள் தற்கொலை அங்கிகள் டெட்னேற்றர் கள் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இச் சந்தேகநபர் மல்லாவி பகுதியைச் சேர்ந்தவர் என்றும் மலேசியாவுக்கு சென்று திரும்பியவர் என்றும் விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது. கம்பஹா மாவட்டத்தில் பலகுண்டு வெடிப்புக்கள் நடத்தப்படுவதற்கு பொறுப்பாக இவர் இருந்துள்ளமையும் பொலி ஸாரின் விசாரணைகளிலிருந்து தெரியவந் துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விசேட பொலிஸ் குழுக்கள் நியமிக்கப் பட்டு மேலதிக விசாரணைகள் றேம்கொள்ளப் பட்டு வருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ரஞ்சித் குணசேகர மேலும் தெரிவித்துள்ளார்.

(அ-6)

# சிங்கப்பூர் எதிர்க்கட்சித் தலைவர் யாழ் ராஜரட்ணம் காலமானார்

சிங்கப்பூர் எதிர்க்கட்சித் தலைவரான யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த ஜே.பி.ராஜரட்ணம் தனது 82 ஆவது வயதில் மாரடைப்பினால் காலமானார். 1926இல் யாழ்ப்பாணத்தில் பிறந்த ராஜரட்ணம், சிங்கப்பூர் செல்ல முன் னர், பிரித்தானியாவில் வழக்கறிஞராகத் தேர்ச்சி பெற்றார்.

1981 ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றி பெற்று சிங்கப்பூரின் முதலாவது எதிரணிப் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவான தன் மூலம், ஒரே கட்சி ஆட்சியைக் கொண்டு சிங்கப்பூர் வரலாற்றில் இவர் ஒரு திருப்பு முனையை ஏற்படுத்தினார்.

சிங்கப்பூரின் கடந்த 40 வருடங்களாக ஆட்சிபீடத்திலிருந்துவரும் சிங்கப்பூர் மக்கள் இயக்கக் கட்சிக்குச் சவால் விடுக்கும் வகை யில் அண்மையில் மறுசீரமைப்புக் கட்சி ஒன்றை இவர் உருவாக்கியிருந்தார். சிங்கப்பூர் எதிரணி அரசியலின் சின்னமாக இவர் விளங்கினார். அதில் சந்தேகமே கிடையாது என்று தெரிவித்தி ருக்கும் சிங்கப்பூர் ஜனநாயகக் கட்சிச் செயற் பாட்டாளரான சீ சியோ சின் இது ஒரு பேரிழப்பு என்று வர்ணித்திருக்கிறார்.

(அ-5)

# வட்டுகோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியில் பாடசாலைகளுக்கிடையேயான 20-20 மாபெரும் துடுப்பாட்ட சுற்றுப்போட்டி

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு துறையினரால் யாழ் மண் ணில் முதன் முறையாக அழைக்கப்பட்ட யாழ் மாவட்ட பாடசாலை துடுப்பாட்ட அணிகளுக் கிடையேயான மாபெரும் 20-20 துடுப்பாட்ட சுற்றுப் போட்டியினை நடாத்தவுள்ளனர்.

மேற்படி சுற்றுப் போட்டிகள் எதிர்வரும் 3ஆம் 4ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பா ணக் கல்லூரி பிக்னல் மைதானத்தில் கல் லூரி முதல்வர் என்.ஏ. விமலேந்திரன் தலை மையில் இடம் பெறவுள்ளது.

இவ் துடுப்பாட்ட சுற்றுப்போட்டியில் வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, தெல்லிப் பழை யூனியன் கல்லூரி, கொக்கு வில் இந் துக் கல்லூரி,மானிப்பாய் இந்துக்கல் லூரி, புனிதபத்திரிசியார் கல்லூரி, தெல்லிப் பழை மகாஜனாக் கல்லூரி,யாழ் மத்திய கல் லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல் லூரி ஆகிய எட்டுப்பாடசாலைகளின் துடுப் பாட்ட அணிகள் பங்குபற்றவுள்ளனர்.

மேற்படி போட்டியினை இவ்வாண்டு முதல் நடத்துவதோடு இனி வரும் காலங்களில் ஒவ் வொரு வருடமும் சுற்றுப்போட்டியாக நடாத்த வுள்ளதாகவும் இவ் சுற்றுப்போட்டிகள் மூலம் வீரர்கள் தங்கள் திறமைகளை வெளிக் கொணர்ந்து துடுப்பாட்டத்தினை மேலும் வளர்க்க வேண்டும் என்ற நோக்கோடு கல் லூரி விளையாட்டு துறையினால் இவ் சுற்றுப் போட்டி நடாத்தப்படுவதாக கல்லூரி முதல் வர் விமலேந்திரன் தெரிவித்தார். (அ-27)

# படையினரின் திட்டமிட்ட நடவடிக்கையே புறக்கோட்டை குண்டுவெடிப்பு?

## கொழும்பு தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

புறக்கோட்டை மல்வத்தை வீதி வாகன தரிப்பிடத்தில் திங்கட்கிழமை பிற்பகல் இடம் பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமானது படைப் பிரிவின் திட்டமிட்ட நடவடிக்கை என கொழும்பு தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொள்ளுப்பிடியிலிருந்து காலி முகத்தி டல் வரையான காலி வீதியில் உள்ள வீதித் தடைகளை உடனடியாக அகற்றுமாறு உயர் நீதி மன்றம் அறிவிக்கவுள்ளமை குறித்து சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஊடாக முன் கூட்டியே தெரிந்தமையினால் இந்த குண்டு வெடிப்பு நடத்தப்பட்டிருக்கலாம் என்று படைத்துறை ஆய்வாளர்கள் சந்தேகம் தெரிவிக்கின்றனர்.

உயர் நீதிமன்றத்தின் இந்த தீர்ப்பை தடுத்து நிறுத்துவதற்கு அரச தலைவர் செயலக மட்டத்தில் இருந்து நீதித்துறையுடன் தொடர்புகள் எற்படுத்தப்பட்டதாக தெரிய வருகின்றது.

அத்துடன் படை உயர் அதிகாரிகள் சிலர் நீதித்துறைக்கு நெருக்கமான உயர் நிலை அதிகாரிகள் சிலரை சந்தித்து கலந்துரை யாடினர் என்று தெரியவருகின்றது.

ஆனாலும் இந்த முயற்சிகள் எதுவும் பயனளிக்கவில்லை என கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனவே வீதித்தடைகள் அகற்றப்படாமல் தொடர்ந்தும் வைத்திருக்க வேண்டும் என் பதை நியாயப்படுத்துவதற்காக புறக் கோட்டை வாகன தரிப்பிடத்தில் குண்டுத் தாக்குதல் ஒன்றை படைப்பிரிவு நடத்தியிருக் கலாம் என பிரபல ஆங்கில ஊடகம் ஒன் றின் பத்தி எழுத்தாளர் ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை குண்டுவெடித்த அன்றைய நாள் கலை முதல் மல்வத்த வீதியில் இராணு வத்தினரும் பொலிசாரும் தேடுதல், சோதனை நடவடிக்கைகளை மேற்கொண் டதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.


அவ்வாறு சோதனை நடவடிக்கைகள் இடம் பெற்ற சுமார் 30 நிமிடத்தில் அங்குள்ள வாகன தரிப்பிடத்தில் குண்டு வெடித்ததாக சம்ப வத்தை நேரில் கண்டவர்கள் விபரிக் கின்றனர்.

(அ-5)

# ஜே.டி.சி.எ.வெற்றிக்கிண்ணம் பாலகுமாரின் அபார பந்து வீச்சில்

## சென்றல் அணி கால் இறுதிக்கு தெரிவு

ஜே.டி.சி.எ. வெற்றிக் கிண்ணத்திற்காக யாழ். மாவட்ட துடுப்பாட்ட சங்கம் நடத்தும் நொக்கவுட் முறையிலான 50 பந்து பரி மாற் றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட் டியில் இரண்டாவது சுற்று 10வது போட்டி யாழ். பல்கலைக்கழக அணிக்கும், யாழ். சென்றல் விளையாட்டு கழக அணிக்கும் இடை யில் யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் கடந்த 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது யாழ். சென்றல் விளை யாட்டு கழக அணி 47 ஓட்டங்களால் வெற்றி பெற்று கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற் றுள்ளது.



முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். சென் றல் அணி 41 ஓவர்களில் சகல இலக்கு களையும் இழந்து 195 ஓட்டங்களை பெற் றனர். சுரேஸ்ராஜா - 24, சுதர்ஸன் 71, யசின் தன் 30 ஓட்டங்களை பெற்றனர். யாழ். சென் றல் அணி 47 ஓட்டங்களுக்கு 5 இலக்கு களை இழந்த நிலையில் யசின்தன், சுதர் ஸன் சோடி நிதானமாக விளையாடி 6வது விக்கெட் இணைச் சோடியாக 71 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தனர்.

நிஸாந்தன் 34 ஓட்டங்களை கொடுத்து 5 இலக்குகளையும், ஜனார்த்தனன் 29 ஓட்டங் களை கொடுத்து 2 இலக்குகளையும் , உதய ணன் 46 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்கு களையும் கைப்பற்றினர். 196 ஓட்டங்களை பெற்றால் வெற்றி என்ற நிலையில் துடுப் பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 29.4 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 147 ஓட்டங்களை பெற்றனர். ஜெயந் திரன் ஆட்டமிழக்காது 80 ஓட்டங்களை பெற்றார்.

ஆரம்ப துடுப்பாட்ட வீரனாக சென்ற ஜெயந் திரன் ஆட்டமிழக்காது 80 ஓட்டங்களை பெற் றமை ஜே. டி. சி. எ. வெற்றிக்கிண்ண போட்டி யில் ஓர் சாதனை என்பது குறிப்பிடத்தக்கது. ஆர் பாலக்குமார் 9.4 பந்து பரிமாற்றங்களில் 30ஓட்டங்களை கொடுத்து 6 இலக்குகளை கைப்பற்றியதன் மூலம் யாழ். சென்றல் விளை யாட்டு கழக அணி கால் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றமை குறிப்பிடத்தக்கது. சதீயன், ஜோன்சன் தலா 2 இலக்குகளை கைப்பற்றி னர் பற்றீசியன்ஸ், யூனியன்ஸ் கழக அணி களுக்கிடையில் நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் யாழ். சென்றல் விளை யாட் டுக் கழக அணி கால் இறுதிப் போட்டியில் விளை யாட உள்ளனர். என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### செங்கத்தாரி

Botinical Name - Capparis aphulla/ Cappris spinosa

family-Capparidaceae

Engl-Caper plant / Caper bush

வளைந்த மெல்லிய மஞ்சள் நிற முட் களை கிளைகளிற் கொண்டுள்ள பெருஞ் செடி வகையைச் சார்ந்த ஏறு கொடித் தாவ ரமாகும். பெரும்பாலும் கற்பூமியில் (dry rocky and stony soils) பெரும்பாலும் வளரக்கூடியது. கோளவடிவ இலைகளை யுடையது. இதன் பருத்த தண்டுகளின் பட் டைகளின் உட்புறம் கருஞ் சிவப்பாக காணப்படும். வெள்ளை நிற பூக்களைக் கொண்டது. கோளவடிவ பழங்களைக் கொண்டது. பழத்தின் வெளித்தோல் மெல் லியதாக இருக்கும். விதைகள் 3-4 மி.மீ விட்டமுடையவை.


பரம்பலும், இனவிருத்தியும்:

யாழ் மாவட்டத்தில் கல்லகம் , மட்டுவில் தெற்கு ஆகிய பகுதிகளில் பரம்பல் அதிகம் காணப்படுகின்றது.

வேர்க்கன்றுகள் மூலம் இனவிருத்தி செய்யலாம்.

மருத்துவப் பயன்கள்

செங்கத்தாரி வேர்ப்பட்டையானது யாழ்ப்பாண சித்த மருத்துவ நூல்களில் தோல்வியாதிகட்கு ப யன்படும் மருந்துகளில் கூடுதலாக சேர்க்கப்படுவது குறிப்பிட வேண் டிய விடயமாகும்.



இதன் பட்டைகள் சுத்தமான நீர்விட்டு நன்றாக அரைத்து தேகத்தில் பூசிச் சில நிமி டங்கள் உலரவிட்டு பின்பு குளித்துவர கரப் பான், கிரந்தி, கொள்ளிக்கரப்பான் முதலிய தோல் நோய்கள் தீரும். அல்லது இதன் வேரை நன்கு சுத்தப்படுத்தி பால் விட்டு அரைத்து காலை,மாலை 5கிராம் அளவு பாலில் கலக்கி குடித்துக்கொண்டு வந்தாலும் மேற்படி நோய்கள் அகலும்.

இதன் பட்டையிலிருந்து தயாரிக்கப்படும் செங்கத்தாரி எண்ணெய் குழந்தைகளுக்கு ஏற்படும் தோல்வியாதிகளுக்கு சிறந்த மருந் தாகும்.

பொதுவாக முட்தாவர மூலிகைகள் ஒவ் வாமையை (Aucrgic) நீக்கக்கூடிய மருந்து களில் முக்கிய மூலிகையாக சேர்க்கப்படுவ தும், தோலில் ஏற்படும் ஒவ்வாமையை நீக் குவதும் அவதானிக்கப்பட்ட விடயங்கள், அத்துடன் ஆராயப்பட வேண்டியவையுமா கும்.

குறிப்பு

இந்தியாவில் இருந்து தருவிக்கப்படும், ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட மருந்தான Liv 52 இல் செங்கத்தாரியும் ஓர் முக்கிய

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்ட விரிவுரையாளர் , சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம் ,கைதடி.

சரக்காகும். இத்துடன் தோலில் ஏற்படும் சொறி, கடி போன்ற நிலைமைகளில் பயன்படும். Geriforte எனும் ஆயுர்வேத மருந்திலும் இம் மூலிகையின் சாறு சேர்க்கப்படுகின்றது.

இவ் பட்டையில் ஊறல் கசாயத்தினை வெளிப் பிரயோகமாக புண்கள் கழுவவும், மற் றும் மூட்டுக்களில் ஏற்படும் நோய்களுக்கும் பயன்படுத்தலாம். இதன் பழங்களையும், பூமொட்டுக்களையும் ஊறுகாயாக தயாரித்து எடுக்கலாம். (Pickled) பசியைத் தூண்டும். கச நோய்உள்ளவர்களும்இதனைப்பயன்படுத்தலாம்.

# யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும் மதத் தலைவர்கள் கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கம், தமிழீழ விடுதலைப் புலிகளை தோற்கடிப்பதன் மூலம் சமாதானத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கின்ற நிலையில், மதத் தலைவர்கள் யுத்தம் முடிபுக்கு கொண்டு வரப்பட வேண்டும் என கோரியுள்ளனர்.

சர்வதேச சமாதான தினத்தை முன்னிட்டு கொழும்பில் உள்ள இலங்கை மன்றக் கல்லூரியில் அண்மையில் கூடிய 25 மதத் தலைவர்களும் சுமார் 300 பொது மக்களும் இது தொடர்பான தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய தந்திரிமலே சந்தவிமல தேரர், இலங்கையில் உள் அனைத்து மக்களும் சமாதானம் தூரத்தே உள்ள கனவு என்றே எண்ணுவதாக குறிப்பிட்டுள்ளார்.

நிகழ்வில் உரையாற்றிய நுகெவன ஆலயத்தின் பிரதம பிக்கு பலர் சுயநலம் காரணமாகவே சமாதானம் தொடர்பில் பேசுவதற்கு அஞ்சுகின்றனர் எனக் குறிப்பிட்டார். இதற்கு மரணபயமும் ஒரு காரணம் என அவர் தெரிவித்தார்.

கடந்த 20 வருடங்களாக இலங்கையில் சமாதானம் தொடர்பாக பேசப்பட்டு வருகின்ற போதும், இரண்டு சமூகங்களுக்கு இடையிலான பிரிவுகளே அதிகரித்துள்ளதாக கத்தோலிக்க தந்தை ஒருவர் தமது உரையில் குறிப்பிட்டார். (அ-5)

# நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் தீவக பிரதேசத்திற்கான நவராத்திரி விழா 3 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு, இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள அபிவிருத்தி உதவியாளர் எஸ். உதயபாலன் தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக புங்குடுதீவு ஸ்ரீ கணேசா வித்தியாசாலை அதிபர் எஸ்.கே.கணேசலிங்கம், சிறப்பு விருந்தினர்களாக புங்குடுதீவு தல்லையப்பற்று சங்கர முருகமூர்த்தி ஆலய தலைவர் ஆ.பேரின்பநாதன், J/25 கிராம சேவகர் எஸ்.சிவா ஆகியோர் கலந்து கொள்வர்.

விழாவில் 'நவராத்திரியின் சிறப்பு' எனும் பொருளில் இராசையா ஸ்ரீதரன் சிறப்புச் சொற்பொழிவாற்றுவார்.

அத்துடன் புங்குடுதீவு தல்லையப்பற்று சங்கர முருகமூர்த்தி அறநெறிப்பாடசாலை மாணவர்களின், கலை நிகழ்வுகளும் இடம் பெறும். (ஓ)

# கற்பித்த ஆசிரியர்களை கௌரவிக்க ஏற்பாடு

## தெல்லிப்பழை மகாஜனா பழைய மாணவர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் கற்பித்து ஓய்வு பெற்ற பின் மேல் மாகாணத்தில் வசிக்கும் ஆசிரியர்களை வணங்கி வாழ்த்தும் விழா 'வயல் நல் வாடை' என்ற சிறப்புச் செயற்றிட்டத்தின் கீழ் மகாஜனாக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் கொழும்புக் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தின் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் நடைபெறும் இந்நிகழ்வில் ஏறத்தாழ 20 ஓய்வு நிலை ஆசிரியர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

இந்நிகழ்வில் பங்குபற்றி வாழ்வில் ஒளியூட்டிய ஞான விளக்குகள் ஆகிய ஆசிரியர்களை வாழ்த்துமாறு மகாஜனாக் கல்லூரியுடன் தொடர்புடைய பழைய மாணவர்கள், பெற்றோர்கள், இப்பொழுது பணியில் இருக்கும் முன்னாள் மகாஜனா ஆசிரியர்கள், நலன் விரும்பிகள் அனைவரையும் விழா ஏற்பாட்டுக்குழு அழைத்திருக்கிறது.

சங்கத்தின் தலைவர் திருமதி கோகிலா மகேந்திரனின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் வரவேற்புரையை திருமதி கேசினி கோணேஸ்வரனும் வாழ்த்துரைகளை ஓய்வு நிலை நீதியரசர் மனோ சிறிதரன், சட்டத்தரணி கே.வி.மகாதேவன் ஆகியோரும் நன்றியுரையை எஸ்.கதிர்காமத்தம்பியும் நிகழ்த்துவர்.

பழைய மாணவர் பலரும் ஓய்வு நிலை ஆசிரியர்களுக்கு அன்பளிப்புகளை வழங்கி கௌரவிப்பர். (ஓ)

# சிறுவர் தின விழா

சங்கானை ஸ்தான அ.மி.த.க.பாடசாலையின் சர்வதேச சிறுவர் தின விழா இன்று காலை 9.30 மணிக்கு அதிபர் ஆ.பேரின்பநாயகம் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இந்நிகழ்வில் சங்கானை ஸ்தான அ.மி.த.க பாடசாலைச் சிறார்கள், சங்கானை சலேசியார் முன்பள்ளி சிறார்கள், சங்கானை நீதவான குடியிருப்பு முன்பள்ளிச் சிறார்கள், சங்கானை அறிவொளி முன்பள்ளிச் சிறார்கள் விருந்தினர்களாக கலந்து கொள்கின்றனர்.

ஆசியுரையினை சங்கானை முருகமூர்த்தி தேவஸ்தான குரு பிரம்மஸ்ரீ சிவ.நித்தியானந்தக் குருக்கள், சங்கானை தென்னிந்தியத் திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு ரி.நடராசா ஆகியோர் வழங்குவர். வாழ்த்துரைகளை வலிகாமம் வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், வலி.மேற்கு பிரதேச செயலர் திருமதி தேவனந்தினி பாபு, சங்கானை கோட்டக்கல்விப்பணிப்பாளர் துரை எங்கரசு ஆகியோர் வழங்குவர். (சி)

# செயலமர்வு

யாழ் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 11 இல் விஞ்ஞானம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று புதன் கிழமையும் நாளை வியாழக்கிழமையும் யாழ் இந்து மகளிர் கல்லூரியில் காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (ஓ)

# சேது சமுத்திரத் திட்டம் மாற்று வழிபாதை அமைப்பது தொடர்பான முதற்கட்ட நிலத்தடி ஆய்வுகள் ஆரம்பம்

(சென்னை)

சேது சமுத்திர திட்டத்தை மாற்று வழிப் பாதையில் அமைப்பது தொடர்பான முதற்கட்ட நிலத்தடி ஆய்வுகள் தனுஷ்கோடி கடற்பரப்பில் ஆரம்பமாகியுள்ளன.

இந்திய மண்ணியல் ஆய்வுத்துறையின் 7 ஊழியர்களைக் கொண்ட குழுவொன்றே இந்த ஆய்வில் ஈடுபட்டுவருகின்றது.

இதன்போது தனுஷ்கோடியின் வடபகுதி நிலப்பரப்பில் பூமிக்குள் 30 மீற்றர் ஆழம் வரை துளையிடப்பட்டு நீர், மண்ணின் தன்மை மற்றும் பாறைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

அத்துடன 15 மீற்றர் அளவுவரையான மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு அவையும் ஆய்வுக்குட்படுத்தப்படுவதாகவும் ஆய்வுக் குழுவில் உள்ள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இராமர் பாலத்திற்கு சேத மேற்படாத வகையில் சேது சமுத்திர திட்டத்தை நிறைவேற்றும்படியும் அதற்காக மாற்றுவழியொன்றை தேர்வு செய்யும்படியும் இந்திய உயர் நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது.

இதனையடுத்து இது குறித்து ஆராய்வதற்கென இந்திய மத்திய அரசால் நியமிக்கப்பட்ட விசேட நிபுணர்குழு தற்பொழுது தனது ஆய்வுகளை ஆரம்பித்துள்ளது. (ஓ)


# அரசாங்க அறிவித்தல்

## உணவுப் பொருட்களுக்கான கூறுவிலை கோரல்

நாவற்குழி -II, III மற்றும் கோண்டாவில் அரச உணவுக் களஞ்சியங்களில் பின்வரும் பொருட்கள் விற்பனைக்காக காணப்படுகின்றது.

| களஞ்சியம் | பொருள் |
|---|---|
| நாவற்குழி -II | தேயிலை,புளி |
| நாவற்குழி -III | பருப்பு (மஞ்சள்,சிவப்பு) |
| கோண்டாவில் | பருப்பு (மஞ்சள்,சிவப்பு) |

இப்பொருட்கள் விற்பனை செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது. இப்பொருட்களை கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் விண்ணப்பப் படிவத்தை புனர்வாழ்வு கிளையில் பெற்று தபால் உறையின் மேல் மூலையில் 'உணவுப் பொருட்களுக்கான கூறுவிலை' என குறிப்பிட்டு 10.10.2008ம் திகதி 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு புனர்வாழ்வுப் பகுதியில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகிறார்கள்.

பொருட்களை பார்வையிட விரும்புபவர்கள் அரச உணவுக் களஞ்சியங்களில் வேலை நாட்களில் காலை 9.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை அதற்குரிய களஞ்சியங்களில் பார்வையிடலாம்.

கூறுவிலைகள் 10.10.2008ம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும்.

பொருட்களை எடுப்பவர்கள் மாவட்டச் செயலக இலங்கை வங்கிக் கிளையில் பணத்தை உடனடியாக செலுத்தி பொருட்களை உடனடியாக களஞ்சியத்தில் இருந்து அகற்ற வேண்டும்.

கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**க.கணேஷ்,**
**அரசாங்க அதிபரும் / மாவட்ட செயலரும்,**
**யாழ்.மாவட்டம்.**

(C-1625)



யாழ்.மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவும், அரச சார்பற்ற நிறுவனங்களும் இணைந்து நடாத்தும்

# சர்வதேச சிறுவர் தினம் -ஒக்டோபர் 01 2008



தலைமை
**திரு. கி.குணாளசிங்கம்**
(திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட செயலகம்,யாழ்ப்பாணம்)
பிரதம விருந்தினர்
**உயர்திரு. க.கணேஷ்**
(அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)
சிறப்பு விருந்தினர்
**திரு. ஆ.சிவசுவாமி**
(மேலதிக அரசாங்க அதிபர், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்)
கௌரவ விருந்தினர்கள்
**திரு. விக்டர் மோசஸ்**
(மாவட்ட முகாமையாளர்,சிறுவர் பாதுகாப்பு இலங்கை, யாழ்ப்பாணம்)
**டயானி ஆர்க்கி**
(Programme Specialist, Unicef, Jaffna.)

**இடம்:-** வீரசிங்கம் மண்டபம்
**காலம்:-** 01.10.2008 புதன்கிழமை காலை 9.30 மணி

*(அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்)*

"பிள்ளைகளுக்கு செவிசாய்ப்பதன் மூலம் அவர்களது உலகை மகிழ்ச்சியானதாக்குவோம்."

மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழு, யாழ்.மாவட்டம். | மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்.

(C-1622)

கெட்ட செய்திகளுக்கு இறக்கைகள் உண்டு. நல்ல செய்திகளுக்கு கால்கள் கூடக் கிடையாது.
—அப்துற் ரஹீம்

வலம்புரி

## பொதுமக்கள் விழிப்பாக இருக்கும்போதே தேவையற்ற சிக்கல்களை தவிர்க்கலாம்

யுத்தம் இடம்பெறுகின்றபோது கூடவே, வதந்திகள், பொருட் பதுக்கல்கள், விலையேற்றங்கள் எனப் பல்வகைக் குழப்பங்களும் இடம் பெறுவது வழக்கம்.

குறிப்பாக வதந்திகளால் மக்கள் குழப்பமடைவதும் அதனால் பாதிப்படைவதும் கடந்த காலங்களில் நாம் கண்ட அனுபவம்.

எனவே பொதுமக்கள் விழிப்பாக இருப்பதன் மூலமாகவே இதனை கட்டுப்படுத்த முடியும்.

உதாரணமாக முகமாலை ஏ-9 பாதையூடாக, இராணுவம் படை நடவடிக்கையை முன்னெடுக்கும் சாத்தியங்கள் உண்டென்ற செய்தியானது மக்களுக்கான தகவலானதாகும். பத்திரிகைப் பணியில் மக்களுக்கான தகவலை வழங்குவது கட்டாயமானதாகும்.

எனவே ஏ-9 பாதை முகமாலையூடாக கிளிநொச்சி நோக்கிய படை நடவடிக்கை என்பது ஆய்வாளர்களின் அவதானிப்புக்களில் இருந்து பெறப்பட்டவை.

ஆகவே இத் தகவலுடன் மக்கள் விழிப்படைந்து எதற்கும் தயாராக இருப்போம் என்பதை திட்டமிடுவதே பொருத்துடையதாகும்.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக இத்தகைய தகவலை அடுத்து மக்கள் பொருட்களை வேண்டுவதில் முண்டியடித்துக் கொள்வதை காணமுடிகின்றது.

இதனால் பொருட்களை பதுக்குவோருக்கு நாமே வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பவர்களாக இருக்கின்றோம்.

இத்தகைய சம்பவங்களினால் ஏற்பட்ட விலை அதிகரிப்பு குறைவடைவதற்கு சாத்தியமே இல்லாது போகின்றது.

இதைவிட இத்தகைய தவறான முடிவுகளை எடுப்பதனால் குறித்த பொருட்களுக்கு இயல்பாக தட்டுப்பாடு ஏற்படுவதுடன் ஏழை மக்கள் பாதிப்படைவதையும் அவதானிக்க முடிகின்றது.

அதாவது அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களை பொருளாதார பலமுடையவர்கள் தேவைக்கு அதிகமாக வேண்டி வைத்திருக்கும்போது அதன் காரணமாக பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்றது.

இதனால் அன்றாடம் உழைத்து சீவியம் நடத்துவோரின் பாடு மோசமாக அமைகின்றது.

இவ்விதம் ஏழைகள் பாதிப்படைவதற்கு நாம் காரணமாக இருப்பது கூட ஒரு வகையில் பாவமாகவே அமையும்.

எனவே போர்க் காலங்களில் ஏற்படக் கூடிய இக்கட்டான சூழ்நிலையில் எம்மையும் ஏனையவர்களையும் பாதுகாத்துக் கொள்வதே அறிவுடைமையாகும்.

இதற்கு மேலாக தற்போதைய சூழமைவில் ஏற்படக் கூடிய பொருட் பதுக்கல் –செயற்கையான தட்டுப்பாடு போன்றவற்றை எதிர்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதிகாரிகள் எடுக்கக் கூடிய திட்டமிட்ட நடவடிக்கைகள் பதுக்கலில் ஈடுபடுபவர்களை ஓரங் கட்டிவிடும்.

# நிதி அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜயசுந்தர இனிமேல் எந்த அரச சேவையிலும் பதவி வகிக்க முடியாது

## உயர் நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

அரச சொத்துக்களை தனிப்பட்ட இலாபத்துக்குப் பயன்படுத்திய ஜயசுந்தர இனிமேல் எந்த அரச சேவையிலும் பதவி வகிக்கமுடியாது என்றும் எதிர்வரும் 8ஆம் திகதி மன்றில் தனிப்பட்ட ரீதியல் ஆஜராகுமாறும் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் உத்தரவிட்டனர்.

ஜயசுந்தர பொதுமக்களின் அடிப்படை உரிமைகளை மீறியுள்ளார் என்று தெரிவித்து அவருக்கு எதிராக உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ஷிராணி திலகவர்த்தனா,நிமால் காமினி அமரதுங்க ஆகியோர் கொண்ட குழுவே இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்தது

விசாரணையின் போது நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் பி.ஜயசுந்தர மீது இன்னமும் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று பொலிஸ் மா அதிபரிடம் உயர்நீதிமன்றம் கேள்வி எழுப்பியது.

பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ண, சி.ஐ.டி பணிப்பாளர் சிசிர மெண்டிஸ், லஞ்ச ஊழல் திணைக்களப் பணிப்பாளர் நெவில்குருகே ஆகியோர் ஆஜராகியிருந்தனர்.

அப்போது நீதியரசர்கள், முன்னாள் நிதியமைச்சின் செயலாளர் பி.ஜயசுந்தர பதவியில் இருக்கும் போது அரச சொத்துக்களைப் பயன்படுத்தி தனிப்பட்ட ரீதியில் இலாபம் பெற்றுள்ளார். இது ஒரு குற்றச் செயல். அவருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபடலாம். ஏன் இதுவரை அவ்வாறு எந்த நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்று பொலிஸாரிடம் கேள்வி எழுப்பினார்.

இந்த விடயத்தில் புலன் விசாரணைகளை நடத்தி மேலும் ஊழல்களை கண்டுபடிக்கத் தவறிய சி.ஐ.டி பணிப்பாளரையும் நீதியரசர்கள் காட்டமாக விமர்சித்தனர்.

செய்யவேண்டிய வேலைகளைச் செய்யாமல் வாளாதிருப்பதை விட சி.ஐ.டி பணிப்பாளர் பதவியிலிருந்தே விலகிக் போய்விடலாம் என்று கடும் தொனியில் நீதியரசர்கள் கூறினர்.

ஜயசுந்தர மீதான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு சட்டமா அதிபருக்கும் பொலிஸ் மா அதிபருக்கும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நிதியமைச்சின் செயலாளர் பதவியிலிருந்து ஜயசுந்தர ஒதுங்கியிருந்தாலும் ஏயார் லங்கா நிறுவனத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் பதவி உட்பட சில அரச சேவைகளில் அவர் தொடர்ந்தும் இருக்கிறார் என்று மனுதாரர் சார்பாக வாதாடிய சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன் நீதிமன்றத்திடம் சுட்டிக்காட்டினார்.

அதனைச் செவிமடுத்த நீதியரசர்கள் அரச சொத்துக்களை தனிப்பட்ட இலாபத்துக்குப் பயன்படுத்திய ஜயசுந்தர இனிமேல் எந்த அரசசேவையிலும் பதவி வகிக்கமுடியாது என்று உத்தரவிட்டனர். இது தொடர்பாக விசாரிக்க எதிர்வரும் 8ஆம் திகதி தனிப்பட்ட ரீதியில் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறும் ஜயசுந்தரவுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. (அ-5)

# இலங்கை பௌத்த இராச்சியம்; பயங்கரவாதம் வெற்றி பெறாது

## பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க

(கொழும்பு)

இலங்கை பௌத்த இராச்சியம். எனவே இங்கு ஒரு போதும் பயங்கரவாதம் வெற்றிபெறமுடியாது. பௌத்த தர்மம் எமது நாட்டைப் பாதுகாக்கும்.எமது ஆட்சிக் காலத்திற்குள் விடுதலைப் புலி பயங்கரவாதத்திற்கு இறுதித் தீர்வைக் காண்போம் என பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார். சைப்பிரஸுக்கு விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மொரவக்க சோரத தேரருக்கு சங்க நாயக்கர் பதவி வழங்கும் நிகழ்வில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

பலவருடங்களாக எமது நாட்டில் தலைதூங்கியுள்ள பயங்கரவாதத்தால் பெறுமதி மிக்க பல உயிர்களை இழந்துள்ளோம் சொத்துக்களையும் இழந்து நாடு அதலபாதாளத்தில் தள்ளப்பட்டது.

பல வருட காலங்களாக இந்த அழிவுகளுக்கு முற்றுப் புள்ளி வைக்க முடியாமல் போனது.

ஆனால் எமது ஆட்சிக்காலத்தில் விடுதலைப் புலிகள் பிரச்சினைக்கு இறுதித் தீர்வைக் காண்போம்.

எதிர்கால சந்ததியினர் சுமுகமாக வாழும் சூழலை உருவாக்குவோம். கிழக்கு மாகாணத்தை எமது படையினர் மீட்டெடுத்தனர். தற்போது அங்கு வாழும் மக்களுக்கு ஜனநாயகம் வழங்கப்பட்டு அச்சமின்றி வாழும் சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மிகவிரைவில் வடபகுதியிலும் இந்த நிலைமையே ஏற்படுத்துவோம். அதற்கான அனைத்து முயற்சிகளையும் அரசாங்கம் முன்னெடுத்து வருகிறது.

வடக்கில் சிறு பிரதேசத்திற்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாத நடவடிக்கைகளுக்கும் வெகுவிரைவில் முற்றுப் புள்ளி வைக்கப்படும்

இதற்குத் தேவையான அனைத்து வளங்களையும் படையினருக்கு அரசாங்கம் வழங்குகின்றது. பௌத்த தர்மத்தின் அடிப்படையில் எமது நாடு அமையப்பெற்றுள்ளது. மும்மணிகளின்ஆசீர்வாதங்களும் எமக்கு உண்டு

இது பௌத்த நாடு. எனவே பயங்கரவாதம் ஒரு போதும் வெற்றி பெறாது என்றும் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்துள்ளார்.

(அ-5)

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டத்திற்கு தே.மு.தி.க தலைவர் விஜயகாந்தும் ஆதரவு

(சென்னை)

இலங்கை தமிழர்களின் நலனுக்காக தமிழ்நாட்டில் நாளை வியாழக்கிழமை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு பிரிவின் சார்பில் நடத்தப்பட உள்ள உண்ணாநிலைப் போராட்டத்துக்கு தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் தலைவரும் நடிகருமான விஜயகாந்த் ஆதரவு தெரிவித்துள்ளார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் போராட்டத்துக்கு அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா, ம.தி.மு.க.பொதுச் செயலாளர் வைகோ ஆகியோர் ஏற்கனவே ஆதரவு தெரிவித்துள்ள நிலையில் விஜயகாந்தும் தனது ஆதரவை அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழுவின் செயலாளர் தா.பாண்டியனுக்கு திங்கட்கிழமை விஜயகாந்த் அனுப்பிய கடிதத்தில் இலங்கை தமிழர்கள் சிங்கள அரசின் அடக்கு முறையால் படும் துயரம் சொல்லமுடியாத ஒன்றாகும். நான் சார்ந்திருக்கின்ற தேசிய முற்போக்கு திராவிடர் கழகத்தின் சார்பில் அவைத் தலைவர் பண்டிருட்டி இராமச்சந்திரன் சென்னையில் நடைபெறும் உண்ணா விரதப் போராட்டத்தில் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்குவார் எனத் தெரிவித்துள்ளார்.

(அ-5)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி

## மனிதன் தெய்வீகமானவன்



இந்த உலகம், இந்த உடல்,இந்த மனம் என்பவை கூட மூட நம்பிக்கைகளே எல்லையற்ற ஆன்மாக்கள் நீங்கள் ,மின்னுகிற நட்சத்திரங்களால் ஏமாற்றப்படுவதா! வெட்கம். நீங்கள் தெய்வங்கள், உங்களால் தான் அந்த மின்னுகிற நட்சத்திரங்களே இருக்கின்றன.

மித இயல்பிலுள்ள வலிமையானவை நல்லவை, ஆற்றல் பொருந்தியவை எல்லாம் இந்தத் தெய்வீகத்தின் விளைவே. பலரிடம் இந்த தெய்வீகம் மறைந்துள் ளது. உண்மையில் மனிதனுக்கும் மனிதனுக்கும் வேறுபாடே இல்லை. எல்லா உயிர்களும் ஒன்று போல் தெய்வீகமானவை எல்லையற்ற பெரிய கடல் ஒன்று நமக்குப் பின்னால் இருப்பது போலுள்ளது. நீங்களும் நானும் எல்லாம் அந்தப் பெருங் கடலில் தோன்றும் அலைகளே இந்த எல்லையற்ற தன்மையை வெளியில் வெளிப்படுத்தவே நாம் ஒவ்வொருவரும் முயன்று வருகிறோம். எனவே நமது பிறப்புரிமையாக, நமது உண்மை இயல்பாக நம் ஒவ்வொருவரிலும் எல்லையற்ற உண்மை–அறிவு–இன்பம்– பெருங்கடல் மறைந்துள்ளது. அந்தத் தெய்வீகத்தை வெளிப்படுத்துவதற்கான ஆற்றல் மிகுந்தும் குறைந்தும் இருப்பதுதான் நம்மிடையே வேறுபாட்டிற்குக் காரணமாக அமைகிறது.

ஆன்மாவின் எல்லையற்ற ஆற்றல் ஜடப்பொருளில் செயல் படும் போது பௌதீக வளர்ச்சி உண்டாகிறது; எண்ணத்தில் செயல்பட்டால் அறிவு வளர்ச்சி உண்டாகிறது; தன்னிடமே செயல்படும் போது மனிதன் தெய்வமாகிறான்.

மாநகர சபை, யாழ்ப்பாணம்.



## வன்னி மக்களை வெளி...

சர்வதேச தலைவர்கள் வலியுறுத்தினர்.

இதன் பிரகாரம் கிளிநொச்சி மக்களுக்கான உணவு விநியோகத்தில் ஐக்கிய நாடுகள் சபை ஈடுபட நிபந்தனையின் கீழ் அனுமதியளிப்பதாக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உறுதியளித்தார்.

இதன் பிரகாரமே முதல் கட்டமாக ஐ.நா. உதவி நிறுவனங்கள் முதல் தடவையாக 60 லொறிகளில் உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு அனுமதியளிக்குமாறு அனர்த்த முகாமைத்துவ சேவைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவுக்கும் ஜனாதிபதி நியூயோர்க்கிலிருந்து அறிவுறுத்தியிருந்தார் என அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அத்துடன் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மக்களை வவுனியாவுக்குப் பாதுகாப்புக்காக வருமாறு தெரிவிக்கும்படியும் மன்னாரிலிருந்து இடம்பெயர்ந்து கிளிநொச்சியில் தங்கியிருக்கும் மக்களை மீண்டும் மன்னார் மாவட்டத்திற்குச் செல்லுமாறும் அறிவிக்கும்படி ஐ.நா. தொண்டு நிறுவனங்களிடம் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எனினும் அங்கு இடம்பெயர்ந்துள்ள மக்களை போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பகுதியூடாக இடம்பெயருமாறு தம்மால் அறிவிக்க முடியாது என ஐ.நா. நிறுவனங்கள் அரசாங்கத்திடம் தெரிவித்ததாகவும் அரசாங்கத்தின் உயர் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார். (ச-5)

# ஐ.நாவின் மனித உரிமைகள் ஆலோசகர் மன்னாருக்கு விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மன்றத்தின் மனித உரிமைகள் ஆணையகத்தின் இலங்கைக்கான ஆலோசகர் சிந்தியா பெனிக்கோ வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்கு விஜயம் செய்துள்ளார்.

அப் பகுதிகளுக்குச் சென்ற சிந்தியா பெனிக்கோ பொது நிறுவனங்களின் பிரதிநிதிகளைச் சந்தித்து விரிவாக ஆராய்ந்துள்ளார்.

பின்னர் மன்னார் ஆயர் இல்லத்திற்குச் சென்ற அவர், மன்னார் குரு முதல்வர் விக்டர் சூசையைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச்சந்திப்பில் மனித உரிமைகள் மீறல் குறித்தும் அவர் ஆராய்ந்துள்ளார். (ச)

## நூல் வெளியீட்டு விழா

நெடுந்தீவு அபிவிருத்தி மையத்தினால் வெளியிடப்படும் நெடுந்தீவு முகிலன் எழுதிய மனத்திரை மேகங்கள் நூல் வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிக்குத் தென்னிந்திய திருச்சபை அரங்கில் நடைபெறும்.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகத் தென்னிந்தியத் திருச்சபையின் யாழ்.பேராயர் டானியேல் செல்வரத்தினம் தியாகராஜாவும் சிறப்பு விருந்தினராக நெடுந்தீவு சைவப் பிரகாச வித்தியாலய அதிபர் ச.சத்தியவரதனும் கலந்து கொள்கின்றனர். நூல் வெளியீட்டுரையை நெடுந்தீவு மங்கையற்கரசி வித்தியாலய அதிபர் கோ.பத்மநாதன் நிகழ்த்துவார். (ச-11)

## அருணோதயாக் கல்லூரி மாணவி...

தங்கம் வென்ற வவுனியா சைவப்பிரகாச மகா வித்தியாலய மாணவி ரி.அனுஷியா நேற்று நடைபெற்ற அதே பிரிவு குண்டெறிதல் போட்டியிலும் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைத் தட்டிச் சென்றார்.

அத்துடன் 21 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிவில் முப்பாய்ச்சல் போட்டியில் மன்னார் சென்.ஆன்ஸ் வித்தியாலய மாணவன் எஸ். மரியன் றெஜினோல்ட் சூசை முதலிடத்தைப் பெற்றுத் தங்கப் பதக்கம் வென்றார்.

2008 ஆம் ஆண்டுக்கான பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட விளையாட்டுப் போட்டியில் தடகளப் போட்டிகள் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி நேற்றுடன் முடிபடைந்தது.

இதில் நேற்று நடைபெற்ற 17 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தல் போட்டியில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி மாணவி எஸ்.தனுஷியா 2.35 மீற்றர் உயரம் பாய்ந்து முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கம் வென்றார்.

இதன் மூலம் 2008 ஆம் ஆண்டு தேசிய மட்ட விளையாட்டுப் போட்டி தடகளப் போட்டிகளில் யாழ்.மாவட்டத்தின் சார்பில் முதலாம் இடத்தைப் பிடித்துத் தங்கப் பதக்கம் வென்று வரலாறு படைத்தார்.

21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் வவுனியா சைவப் பிரகாச மாணவி எஸ்.அனுஷியா 10.98 மீற்றர் தூரம் எறிந்து முதலிடத்தைப் பிடித்துத் தங்கப் பதக்கம் பெற்றார்.

இவர் நேற்று முன்தினம் நடைபெற்ற 21 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான தட்டெறிதல் போட்டியில் தங்கப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் வட மாகாணத்தில் இம்முறை 4 தங்கப் பதக்கங்களும் 3 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கங்களையும் 2 தேசிய வர்ண விருதையும் பெற்றுக் கொண்டனர்.

இதில் யாழ்ப்பாண மாணவர்கள் ஒரு தங்கம், 3 வெள்ளி, 3 வெண்கலப் பதக்கம் மற்றும் 2 தேசிய வர்ண விருதையும் பெற்று வட மாகாணத்திற்கே பெருமை சேர்த்தனர் என வடக்கு மாகாண உதவிக் கல்விப் பணிப்பாளர் (உடற்கல்வி) எஸ்.சத்தியபாலன் தெரிவித்தார்.

இம் முறை கிழக்கு மாகாணத்தையும் விட அதிக புள்ளிகளைப் பெற்ற வடக்கு மாகாணம் தேசிய மட்டத்தில் முதல் தடவையாகத் தனது வளர்ச்சியைக் காண்பித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ச-5)

## வன்னிக்...

மிருந்து கைப்பற்றி பொலி கண்டிப் பகுதியில் ஏ-9 வீதியை எட்டிப் பிடிக் கும் தொலைவில் இருப்பதாகவும் இராணுவம் கூறியுள்ளது.

இதேவேளை இராணுவத்தினருடனான மோதலை உறுதிப்படுத்தியுள்ள விடுதலைப் புலிகள் வெலிஓயா எனப்படும் மணலாற்றுப் பகுதியில் 6 முனைகளில் இராணுவத்தினர் மேற்கொண்ட முன்னகர்வு முயற்சி தமது எதிர்த் தாக்குதலில் முறியடிக்கப்பட்டதாகவும் இம் மோதல்களில் 6 படையினர் கொல்லப்பட்டதாகவும் மேலும் 20 இராணுவத்தினர் படுகாயமடைந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

கொக்காவில் மேற்குப் பகுதியில் கடும் சண்டைகள் இடம்பெறுகின்றன. வன்னேரிக்குளத்தில் மேற்குக் களமுனைகளில் முன்னேற்ற முயற்சியில் ஈடுபட்டுள்ள் இராணுவத்தினருக்கு எதிராக 3-வது நாளாக நேற்றும் கடும் சண்டைகள் இடம்பெற்று வருவதாகவும் புலிகள் தெரிவித்துள்ளனர். (ச)

## வன்னிக்கான நிவார...

இது தொடர்பாக நேற்றுக் கொழும்பில் செய்தியாளர் ஒருவருக்கு அவர் தகவல் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியதாவது,

வன்னிக்கான உணவுப் பொருள்கள் நாளை வியாழக்கிழமை 60 லொறிகளில் கொண்டு செல்லப்படும் என முன்னர் தெரிவிக்கப்பட்டது. இது அரசாங்கத்தின் முயற்சிகளைப் பொறுத்தே வெற்றியளிக்கும். இது குறித்து அமைச்சர் மகிந்த சமரசிங்கவை ஐ.நா. அதிகாரிகள் சந்தித்தனர்.

எவ்வாறாயினும் இவ்வாரம் உணவுப் பொருள்களைக் கொண்டு செல்வதற்கான சாத்தியம் இல்லை எனவும் அவர் கூறினார். (எ)

## வன்னிக்கு அறுபது...

மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களில் இடம்பெயர்ந்துள்ள மக்களுக்குத் தேவையான உலர் உணவு, குடிநீர், சுகாதாரம் போன்ற அத்தியாவசிய பொருள்களை அனுப்பி வைப்பது தொடர்பாக நேற்று முன்தினம் கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டதாக அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் இந்தப் பொருள்கள் ஏற்றப்பட்ட 60 லொறிகள் அனுப்பி வைப்பதற் காக ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சர் றிசாத் பதியுதீன் குறிப்பிட்டுள்ளார்.

முல்லைத்தீவிலிருந்து வவுனியாவுக்கு வருகை தரும் வெற்று லொறிகளில் அத்தி யாவசியப் பொருள்கள் ஏற்றப்பட்டு இடம்பெயர்ந்த மக்களுக்கு அவை அனுப்பி வைக்கப்படும்.

இடம் பெயர்ந்த மக்களுக்குத் தேவைப்படுவதாக மாவட்ட அரச அதிபரினால் பரிந்துரைக்கப்படும் பொருள்கள் அனைத்தும் உள்ளடக்கப்படும் என அமைச்சர் குறிப்பிட்டுள்ளதாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அடுத்த வாரம் அளவில் மேலும் 100 லொறிகள் உணவுப் பொருள்களுடன் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பி வைக்கப்படுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ச-6)

## நவராத்திரி...

மூன்று தடுப்புக்கள் முறிந்து விழுந்தன.

அதனையடுத்துப் பின்புறத்தில் வரிசையில் நின்றவர்கள் தள்ளியதில் அனைவரும் கீழே விழுந்தனர். சிலர் சரிவான 75 மீற்றர் மலைப்பாதையில் உருண்டு மற்றைய பக்தர்கள் மீது விழுந்தனர்.

இதனால் பலர் காயமடைந்தார்கள். அதேயிடத்தில் சுமார் 60ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். படுகாயமடைந்தவர்களில் பலர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

உயிரிழந்தவர்களில் பலர் மூச்சுத் திணறலில் சிக்கி உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. உயிரிழந்தவர்களில் பல இளைஞர்களும் அடங்குகின்றனர். நேற்று மாலை வரை 147 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டதாக அரசு தெரிவித்துள்ளது. (ச)


அன்பார்ந்த
அதிபர்களே, ஆசிரியர்களே,
மாணவர்களே!

உங்கள் அபிமானத்திற்குரிய
வலம்புரியில்

மிக விரைவில்

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சினால்
தயாரிக்கப்படும்

★ க.பொ.த (சா/த) மாதிரி வினாத்தாள் (இதுவரை வெளிவராத புதிய பாடத் திட்டம்)




★ க.பொ.த (உயர் தர) மாதிரி வினாத்தாள். (ஒவ்வொரு பாடத்திலும் அலகு ரீதியான விளக்கங்களுடன்)



★ 5ஆம் தரப் புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் என்பன வெளி வரும்.


## மரண அறிவித்தல்

### நாகமுத்து குணநாயகம் (மணியம்) ஆசிரியர்



யாழ்/கந்தர்மடம், ஆத்திசூடி வீதியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் அண்மைக் காலமாக தென்னிந்தியாவின் மதுரை நகரைத் தற்காலிக வாழ்விடமாகவும் கொண்ட நூகமுத்து குணநாயகம் 30.09.2008 அன்று மதுரையில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகமுத்து-இராசமுத்து தம்பதிகளின் அருமைப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள் ளை -ஞானம்மா தம்பதியரின் அருமை மருமகனும், றெஜினாவின் பாசமிகு கணவரும், மகிழ்ச்சிகரன் (ஆசிரியர்-யாழ்.இந்துக் கல்லூரி), மதிஅமிர்தன் (சுவிஸ்), மகிழ்வதனன் (சுவிஸ்), திருமதி பவானி கந்தசாமி (சுவிஸ்), மதிவண்ணன் (மதுரை), வோல்ரன் (மதுரை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருமதி மகேஸ்வரி செல்லத்துரை (ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்கம் மதுரை கூடல் நகரில் 01.10.2008 இன்று நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

138, ஆத்திசூடி வீதி,
கந்தர்மடம் மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்,
கு.மகிழ்ச்சிகரன்,
ஆசிரியர், யாழ்.இந்துக் கல்லூரி.

(1785)


இலங்கை வங்கி போட்டிப் பரீட்சை
வழிகாட்டல் வகுப்புக்கள்

ஆரம்பம்:- புதன் (இன்று) 11 மணி தொடக்கம் 3 மணி வரை
வியாழன், வெள்ளி } 9 மணி தொடக்கம் 2 மணி வரை
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப் படிப்புக்கள் பிரிவு
(யாழ்.போதனா வைத்தியசாலை முன்பாக) (1784)



ரசன்
கல்வி நிலையம்
கே.கே.எஸ்.வீதி, சுன்னாகம்.
'தொழில்படும் விலங்கு'
பொன் திவாகரன்
ஆரம்பம் :- 03.10.2008
நேரம் :- 5.00 p.m.
(1782)



புதிய பிரிவுகள் ஆரம்பம்
Diploma Courses...
Dip In Computerized Accounting
Diploma in English(Grammer & Spoken)
## MS Office ## DTP *V.B, VB.net
* Hardware * Web Designing
* Video Editing *AutoCAD
International Courses...
*MCP *MCSE *MCSA
*CCNA *CCNP *N+ *A+
Degree Course * BIT Semester 1,3 & 5
## பதிவு செய்வோருக்கு கற்கை கட்டண சலுகை
324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
MCS Supported By UNDP/JRRP
www.mcsitacademy.com



யாழ்.மாவட்ட மக்களுக்கு இன்று அரிய சந்தர்ப்ப நாள்
ஸ்ரீ அம்மா பகவான் திருப்பாத தரிசனம் பெறுதல்

01.10.2008 புதன்கிழமை இன்று மு.ப. 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை சுழிபுரம் சந்திக்கு சமீபமாகவுள்ள ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்க ஆன்மீக மையத்தில் இடம்பெறும் பாத பூசை நிகழ்வில் புனிதமாக ஒரு வேண்டுதல் சிந்தனையுடன் அனைவரும் வருகை தந்து ஸ்ரீ அம்மா பகவானின் திருப்பாத தரிசனத்தைப் பெற்று ஆனந்தம், மகிழ்ச்சி, சந்தோசமடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.



சுழிபுரம்
ஸ்ரீ அம்மா பகவான் சற்சங்கம்

01.10.2008 (1786)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 01.10.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.